திராவிடநாடு

7—4—57 | வார வெளியீடு | விலை 16-காசு

சமுதாயமும் அரசாங்கமும்

“சமூக வாழ்வில் மக்களுக்கு நம்பிக்கை வரும்படியாகப் புதுக் கருத்தைப் புகுத்தவேண்டுமானால், அரசாங்கம் தன்னுடைய பொறுப்புகளையும், அதிகாரங்களையும் துண்டு துண்டாகப் பிரித்து எல்லாக் குடிகளுக்கும் பங்கிட்டுக் கொடுத்துவிடவேண்டும். ஒரு நாட்டிலுள்ள ஒவ்வொரு தனி மனிதனும், தானும் அந்த நாட்டிலுள்ள வெவ்வேறு அலுவல்களில் அதிகாரமுள்ளவனென்றும், அந்த நாட்டின் உற்பத்தித் தொழில்களிலும், அரசுப் பொறுப்புக்களிலும் பங்குள்ளவன் என்றும் உணரும்படி செய்துவைக்கவேண்டும்.

அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவனாக இருப்பதில் தன்னுடைய மனிதத் தன்மைக்கு மதிப்பிருக்கிறதென்றும், தன்னுடைய விருப்பத்தையும் பொருட்படுத்துகிறார்கள் என்றும், தானும் சமூகத்திற்குப் பயனளிக்கும் வேலையைச் செய்கிறவன் என்றும் எண்ணும்படியான உணர்ச்சிகளை உண்டாக்கவேண்டும். அதற்கு அரசாங்க அமைப்பின் அளவைக் குறைத்துக்கொள்ள வேண்டியிருக்கும். அங்கங்கே சமாளிக்கக்கூடிய அளவில் சிறு சிறு அமைப்புகள் அவசியமாகின்றன. அப்படிச் செய்தால் தான் அவர்களுடைய உழைப்பின் பலாபலன்களை அங்கங்கே உள்ளவர்கள் அப்போதைக்கப்போது அறிந்து புதுப்புது ஆலோசனைகளைச் செய்துகொள்ள முடியும். அப்போது தான் உண்மையான ஜனநாயகத்தில் சமுதாயம் தனிமனிதனுடைய கருத்துக்களுக்குக் கட்டுப்படுவதும், தனித்தனி மனிதனும் தானே அந்த சமுதாயம் என்று எண்ணுவதும் சாத்தியமாகின்றன”

—புரொபசர் ஜோட்.

அழிவுப் பாதையில்....

அணுகுண்டும் நீர்வளிக் குண்டும் நாளுக்கு நாள் பெருகியும் பரிசோதிக்கப்பட்டும் வருகின்ற காலம் இது! அமைதிவேண்டி உலகின் பெரும் பகுதியினர் பேசியும் போராடியும் வந்தும் ஆதிக்க புரியினர் அவற்றை விட்டபாடில்லை. அழிவுப் பாதையிலேயே உலகம் சென்றுகொண்டிருக்கிறது என்பதற்கு இதோ ஒரு உதாரணம்:-

இங்கிலாந்தில் செல்டன் ஹாம் என்றொரு இடம், அங்கே பிறந்த ஏராளமான குழந்தைகளின் நிறை மிகவும் குறைந்து காணப்பட்டதாம். இரண்டுபவுண்டு மட்டுமே நிறையுள்ள குழந்தைகள் கூடப் பிறந்துள்ளனவாம். "அணுக்கதிரியக்கத்திற்கும் இந்த நிகழ்ச்சிக்கும் நிச்சயமாகச் சம்பந்தம் இருக்க வேண்டும்" என்று அந்நகரச் சுகாதார அதிகாரியான தாமஸ் லாஸன் குறிப்பிட்டிருக்கிறார். நிறை குறைந்த குழந்தைகள் 1950-ம் ஆண்டிலேயே பிறந்ததாகவும், தேவையான குறிப்புக்கள் எடுக்கப்படவில்லையென்றும் அவர் தெரிவித்திருக்கிறார். 1954-ல் மட்டும் 3½-பவுண்டுக்கும் குறைந்த நிறையுள்ள குழந்தைகள் 23-பிறந்தனவாம். இதை ஆராய்வதற்கென்று அமைக்கப்பட்ட குழுவால் எந்தவிதத் தீர்மானத்திறகும் வர இயலவில்லையாம்.

சன்டே பிக்டோரியல் என்ற ஆங்கில இதழ் "அணு குண்டு பரிசோதனைகளுக்கு முன்னமேயே அணுக்கதிரியக்கம் அந்த நகரில் மிக அதிகம். உலோகச் சத்துக்கள் நிறைந்த நீர் ஊற்றுகள் அங்கு நிறைய இருப்பதே அதற்குக் காரணம்" என்று எழுதுகிறது.

ஆராய்ச்சியாளர் ஒருவரை அந்த இதழ் உரிமையாளர் செல்டன்ஹாம் நகருக்கு அனுப்பினர். அவர் முதலில் தண்ணீரைப் பரிசோதனை செய்தார். "ஏற்கனவே இருந்து வந்த பாதகமான சூழ்நிலையோடு நீர்வளிக்குண்டு பரிசோதனையின் விளைவுகளும் சேர்ந்ததால் இத்தகையதொரு கேடு நேரிட்டது" என்று தமதுமுடிவை அறிவித்தார். இங்கிலாந்தின்சுகாதார இலாகாச் செய்தி ஸ்தாபனம் "செல்டன்ஹாம் எங்களுக்குக் குழப்பத்தைஉண்டாக்கியுள்ளது; நிலைமையை ஆராய்வதற்காக கைதேர்ந்த விஞ்ஞானிகளை அனுப்பப் போகிறோம்" என்று அறிவித்துள்ளது.

இத்தகைய கேடுகளும் குழப்பங்களும் விளைந்தபோதும்—உலகின் எதிர்காலச் சிற்பிகள், எதற்கும் பயனற்றவராய் ஆக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டும்—அழிவு தரும் ஆயுதப் பரிசோதனைகளை இங்கிலாந்து கைவிடவில்லை.

எனவே உலகெங்கிலும் எதிர்ப்புத் தோன்றியிருக்கிறது இத்தகைய பரிசோதனைகட்கு. ஜப்பானிலிருந்து சிலகப்பல்களைக்கொண்ட "அமைதிப் படை" பரிசோதனை நிகழும் இடத்திற்குச் செல்லுகிறது. அதன் விளைவுகளுக்குத் தாங்கள் பலியாவதன் மூலம் உலகை விழிப்படையச் செய்ய முடியும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

இங்கிலாந்திலேயே பல இடங்களில் பலவித எதிர்ப்புகள் தோன்றியுள்ளன. லிபரல் கட்சியைச்சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் பரிசோதனையைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். "மான்செஸ்டர் கார்டியன்" எனும் இதழ் "இது போன்ற சோதனைகளை ஒத்திப் போடவாவது செய்யுங்கள்" என்று தலையங்கம் தீட்டுகிறது. அதே இதழில் "கிருஸ்துமஸ் தீவில் சோதனை நடத்துவதன் மூலம் ஆப்கானியரை—எஸ்கிமோக்களை—மற்றும் உலகின் பல்வேறு பகுதியினரை—புற்றுநோய் பீடிக்கச் செய்து சாகடிக்கிறோம். நமக்கென்ன உரிமை இப்படிச் செய்ய?" என்று வேலண்ட் யங் என்பவர் எழுதுகிறார்.

நாற்பத்து நான்கு நாடுகளில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ள தாய்மார்கள் சங்கம் "அணு ஆயுதப் பரிசோதனைகள் தாய்மைப் பண்பை மறுப்பதாகவும், பெண்ணினத்திற்கு ஏற்பட்ட பேரிடியாகவும் இருக்கிறது" என்று அறிக்கை வெளியிட்டுள்ளது.

63-வயதான ஹெரால்டு ஸ்டீல் என்னும் அரசாங்கப் பணியாளர் ஒருவரும், அவரது மனைவியரான ஷீலா என்பவரும் "மனிதப் பண்பிற்கு அப்பாற்பட்ட செய்கைகள் எவ்வளவு பயங்கர விளைவுகளை உண்டாக்குகிறது" என்று உலகிற்கு உணர்த்துவதன் பொருட்டு, பரிசோதனை நடக்கும் இடத்திற்குச் செல்கிறார்கள். ஜப்பானிய அமைதிப் படையுடனேயே அவர்களும் செல்ல இருக்கிறார்கள்.

இவ்வளவு எதிர்ப்புகட்குப் பிறகாவது ஏகாதிபத்தியங்கள் திருந்துமா? காலம்தான் விடையிறுக்க வேண்டும்!

★

பிரதமரின் நாடகம்

பர்மாவின் முன்னாள் பிரதமர் யூநூ ஒரு நாடகம் எழுதியிருக்கிறார். 'ஊது ஆங்தான்' அல்லது 'மக்கள் வெல்கிறார்கள்' என்ற இந்த நாடகம் பிப்ரவரி 27-ம் நாள் அமெரிக்காவில் வெளியிடப்பட்டது.

நாடகம் ஐந்து அங்கங்களைக் கொண்டதாம். விடுதலை பெற்ற பர்மாவில் ஏற்பட்ட எண்ணிறந்த குழப்பங்கள் —பலாத்காரங்கள்— பேசப்பட்ட பயனற்ற தத்துவங்கள் — யூநூவின் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்—இதற்கிடையே ரஷ்யாவின் தலையீடு--இவையனைத்தையும் முறியடிக்க மக்கள் சிந்திய ரத்தம்—ஆகிய அனைத்தையும் நாடகப் பாத்திரங்கள் மூலம் மிகச் சுவைபட வெளியிடுகிறாராம்.

★

பணியும் பலனும்

ஏ. கலைவாணன் B.A.,

உரிமை வேட்கை கொண்டோர்க்கு உதாசீனமும், பகுத்தறிவுச் செம்மல்களுக்குப் பழித்துரையும், தொடக்கத்திலே கிடைத்த பரிசாகு, வரலாறு நமக்குத் தீட்டிக் காட்டுகிறது. ஆனால் அவர்களின் இடைவெளியற்ற நிலையான பணி, மக்கள் மன்றத்திலே பின்பு நல்ல பலனைத் தந்திருப்பதாகவே நாம் அறிகிறோம். வழிவழி வருகின்ற அந்த வரலாற்று உண்மையைத்தான் நமக்கு நினைவுபடுத்துகிறது — திராவிட முன்னேற்றக் கழகத்தின் பணியும், இன்றைய பலனும். இன விடுதலையைத் தலையாய குறிக்கோளாகக் கொண்டு, சமூகம், பொருளாதாரம் ஆகிய இரு பெருந்துறைகளிலும் மாற்றம் ஏற்படப் பாடுபட்டு வருவது தி. மு. கழகம்.

"ஏக இந்தியா" பஜனை செய்வோர்க்கு திராவிடத்தை—தென்னாட்டை முதன்முதல் நினைவு படுத்தியிருப்பது தி. மு. கழகம். திட்டம் என்று சொல்லி மத்திய அரசியலார் நமக்குச் செய்யும் பாகுபாட்டுக் குட்டினை வெளிப்படுத்தியிருப்பது தி. மு. கழகம். "மதராசு"க்குள் அடங்கிக்கிடந்த மக்களுக்கு, வேங்கடத்தை விண்முட்டும் விந்தியத்தை பனிகொட்டும் இமயத்தை, அங்குள்ள தென்னாட்டு வெற்றிப் பட்டயத்தை எடுத்து முழங்கி அறிவுறுத்தியது தி. மு. கழகம்.

"திராவிடம் நமது பிறப்புரிமை. ஆரியத்தால் வீழ்ந்தோம். இனி வாழ்வோம்" என அழைப்புக் குரல் விடுத்தபோது, எதிர்ப்புக் கணைகள் தொடுத்தவர் பலர்.

திராவிடமாவது நாடாவது
வரலாற்றில் கிடையாதே
வெறும் கற்பனை
ஆகாத பேதம், அடுக்காத வாதம்
இது ஏக இந்தியா.

பலப்பல கூறினர். வாதமிட்டோரை வெற்றிகொள்ள வரலாற்றைத் துணைக்கழைத்தோம். எள்ளி நகையாடியோருக்குப் பதில் சொல்ல இலக்கியம் முந்திக்கொண்டது.

கனகவிசயரைப் பங்கப்படுத்திய சேரன்
கங்கைக் கரையில் செங்களம் அமைத்த சோழன்
கயலை இமயம் பொறித்த பாண்டியன்

இப்படி பாராளும் வேந்தர்கள் நம் பக்கம். காலடி வைக்க கலக்கம் கொண்ட கனிஷ்கள் — அஞ்சிய அசோகன், அவன் பரம்பரை குப்தர் — இவர்கள் நமக்குப் பக்க பலம்.

எதிர்ப்பும், இழிவும்—கொதிப்பும், குமுறலும் எத்துணை இருந்தும், கழகம் தொடர்ந்து நடத்தி வரும் பணி — இன்று பலனளிக்காமல் போகவில்லை. வரிந்து கட்டிக்கொண்டு வந்தோரெல்லாம் சரிந்து கிடக்கின்றனர். ஆதாரம் எங்கே என்று கேட்டவர்கள், கிடைத்தபின் — "ஆமாம் இருந்தாலும்..." என்று இழுத்தவாறு பேசுகிறார்கள். வாதம் புரிந்தோர் இன்று "ஏனிந்தப்பேதம்" என்று சமாதானத்திற்கு வருகிறார்கள். அபவாதம் கூறியவர்கள் வாயிலே இன்று ஒற்றுமை உபதேசம் வெளிவருகிறது "ஐந்தாண்டுத் திட்டத்தில் வடக்கிற்கு அதிக பங்கு. தெற்குப் புறக்கணிக்கப் பட்டுவிட்டது. திராவிடம் முன்னேறவேண்டும்" என்ற தி. மு. கழகத்தின் இந்த முழக்கத்திற்கு "ஆம் தென்னாடு முன்னேற வேண்டும்" என்று பலரும் இன்று ஆமோதிக்கத்தான் செய்கிறார்கள். அண்மையில் ஏற்பட்டிருக்கும் கல்கியின் அரசியல் தெளிவும், விகடன் விவேகமும் — தி. மு. கழகத்தின் பணியினால் விளைந்த பலனே.

தி. மு. கழகத்தின், பண்பும், பணியும், பலமும்; தேர்தல் முடிவில் குன்றிலிட்ட தீபமாகி விட்டது.

"காங்கிரசிற்கு அடுத்தபடியாக தி. மு. கழகம் ராஜ்யத்தில் பலமான அரசியல் கட்சியாக முன் வந்துள்ளதே தற்போது ராஜ்யத்தில் முடிந்துள்ள பொதுத் தேர்தலில் ஏற்பட்டுள்ள முக்கியமான அம்சமாகும்"

இவ்வாறு கூறி, "தி. மு. க. பலம் வாய்ந்த கட்சி" என்று விளக்கியவர்-கழகத்தினர் அல்ல; -சட்டசபை முன்னாள் செயலாளர் கிருஷ்ணையர்.

"பழம் இலக்கியங்களில் திராவிடம் என்றால் தென்னாடு என்று தான் பொருள். தென்னாடு முன்னேற வேண்டும். அந்த மக்கள் ஒன்றுபடவேண்டும்"

கல்கியின் "தென்னாடு முன்னேற வேண்டும்" என்ற துணைத் தலையங்கத்தில் காணப்படும் கருத்து விளக்கம் இது. ஆனால் கல்கி, பழந்தமிழ் இலக்கியங்களில் ஆரியம் — திராவிடம் பாகுபாடு இல்லை என்று கூறுவது பழுதான வாதம். பைந்தமிழ் பாடல்களில் ஆரியம் என்ற சொல் பல இடங்களில் வருகிறது. கன்னித் தமிழர் கங்கைக்கரை ஆண்ட செய்தியும் குறிக்கப்படுகிறது.

"ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்"

"ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்"

"பேரிசை மரபின் ஆரியர் வணக்கி"

"குமரியோடு வடஇமயத்தொரு மொழி வைத்து உலகாண்ட சேரலாதன்"

"வழிமறித்த இவான் மலை உச்சியில் புலி பொறித்த கரிகாலன்"

பக்கம் நீளும்—பத்துப் பாட்டும், புறமும் பதிற்றுப் பத்தும் பாடம் தந்தால். கல்கியின் 24—3—57ம் தேதி இதழ் தலையங்கம் செப்புகிறது "திராவிடத்தைக் காப்போம்" என்று.

"திராவிடம் என்பது தென்னாட்டின் பெயர். அதன் முன்னேற்றத்தை முக்கியமாகக் கவனிக்கும் கூட்டம் ஒன்று இருப்பது அவசியம். ஜனகண என்று நாம்பாடும் நாட்டு வணக்கப் பாட்டில் சொல்லப்பட்ட திராவிடத்தைக் கவனித்துக் காத்து வருவோமாக"

தலையங்கத்தில் "ஜனகண" தேசீயம் ஒலித்தாலும், மாற்றார் பத்திரிகை ஒன்று இந்த அளவுக்கு மனப்பக்குவம் அடைந்தது வரவேற்கத்தக்கது. ஒன்றுமே இல்லை என்று சொல்பவர்கள் "ஏதோ இருக்கிறது" என்று சொல்லும் நிலைக்கு வருவதை "முன்னேற்றம்" என்றுதானே சொல்லவேண்டும்.

ஆனந்த விகடன் எழுதிய தலையங்கம், கழகத்தின் கண்ணியத்தையும், சிறப்பையும், பணியையும் நன்கு காட்டுகிறது.

"அவர்கள் நடத்திய கூட்டங்களிலெல்லாம் கண்யமான முறை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. பேசிய தலைவர்கள் யாரும் வசை மொழியில் இறங்கவில்லை. தங்களை இடைவிடாமல் தாக்கும் பெரியாரைக்கூட அவர்கள் மரியாதை குறையாமல்தான் மறுத்துப்பேசி வந்தார்கள். இதைப் பார்த்து மக்கள் வியந்தனர்"

ஆனந்த விகடன் தந்த வரவேற்பு நமது கழகத்திற்குத் தரப்பட்டதாகும். நம் கழகத்தின் பணியிலும் திறமையிலும் நாட்டுக்கும் அந்த ஏட்டுக்கும் நல்ல நம்பிக்கை இருக்கிறது. "சட்டமன்றம் சென்றால் கொட்டத்தை ஒடுக்குவர். நாட்டுக்கு நல்லபல திட்டங்கள் தருவர்" என்று அவர்களுக்குத் தெரியும். எனவேதான் விகடன்,

"சட்டசபையில் இனி ஒரு புது விழிப்பு ஏற்படும். கேள்விகளும், மந்திரிகளின் பதில்களும் காரசாரமாக இருக்கும். தமிழர் நலத்திற்கான காரியங்கள் போட்டி போட்டுக் கொண்டு செய்யப்படும்"

எதிராரின் ஆதரவிற்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமாகியிருக்கும் இந்தக் கட்டம்-இத்தனை ஆண்டுகள் தி. மு. கழகத்தின் அயராத பணியால் ஏற்பட்ட பலன். இதை நாடு உணர்ந்து வருகிறது. ஏடுகளும் அறிந்து வருகின்றன.

வாழ்க தமிழ்! வெல்க திராவிடம்!

★

"திராவிட நாடு"

புதிய விலை விவரம்

தனிப்பிரதி ஒன்றின் விலை 16-காசு (நயே பைசே)

ஏஜண்டுகள் கவனத்திற்கு

அன்புடையீர்,

ஏப்ரல் முதல், புதுக்கணக்கும் புது நாணய மாற்றமும் செய்யவேண்டியிருப்பதால் மார்ச் முடிய உள்ள தங்கள் பாக்கி முழுவதையும் 15—4—57க்குள் இங்கு கிடைக்கும்படி அன்புகூர்ந்து அனுப்பிவைக்கவும்.

காகித விலை ஏற்றத்தை முக்கியமாகக்கொண்டும், புதிய நாணய முறையையொட்டியும் "திராவிடநாடு" பத்திரிகையின் விலை இதழ் 1-க்கு 16-நயேபைசேவாக ஆக்கப்பட்டிருக்கிறது என்பதையும், வழக்கம்போல் தங்களுக்கு 25% கழிவு உண்டு என்பதையும், அதாவது, தாங்கள், இதழ் 1-க்கு 4-'புதுக் காசு' எடுத்துக்கொண்டு, அலுவலகத்துக்கு 12-'புதுக் காசு' வீதம் கணக்கிட்டு மாதா மாதம் பட்டியல்படி அனுப்பிவைக்க வேண்டியதென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பிரதி 1-க்கு ரூ. 1-வீதம் முன்பணம் அனுப்பி வைப்போருக்கே கூடுதலான பிரதிகள் அனுப்பிவைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

சந்தாதாரர் கவனத்திற்கு

அன்புடையீர்,

ஆண்டு சந்தா ரூ. 8—0—0
அரையாண்டு சந்தா ரூ. 4—0—0

"திராவிட நாடு" சந்தாவில் சிறிது மாற்றம் ஏற்பட்டதற்குக் காரணம் புதிய நாணய முறை மட்டுமல்ல என்பதையும் காகித விலை ஏற்றமே இதற்கு முக்கிய காரணமென்பதையும் சந்தாதாரர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சந்தாதாரர்கள் கடிதங்கள் எழுதும்போதும், சந்தாத் தொகை அனுப்பும்போதும் தங்கள் சந்தா எண்ணைத் தவறாது குறிப்பிட்டு எழுதவும். சந்தா முடியும் தேதி முகவரியின் கீழே குறிப்பிடப்பட்டிருப்பதால், ஒரு வாரம் முன்னதாகவே தொகையை அனுப்பிச் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டுகிறோம்.

நிர்வாகி.

காஞ்சீபுரம்

7—4—57

தம்பி!

"கண்ணே! காதற்கனியே! இன்னும் ஓர் திங்களில் நான் வந்து சேருகிறேன். தென்றலும் திங்களும், தேன்மொழியாளே! உன்னைத்தான் வாட்டுகின்றன என்று எண்ணாதே; என்னை அவை இரண்டும் ஈட்டி எனக் குத்துகின்றன. எனினும், என் அன்பே! உனக்கு, முத்துமாலையும் தங்கவளைகளும், உன் அழகுக்குத் தக்கதான அணிபணி பலவும் பூட்டி அழகு கண்டு பெருமைப்படத்தானே, நான் இங்கு அல்லும் பகலும், கொல்லும் நினைப்பினையும் ஒருபுறம் நிறுத்திவைத்தபடி, பாடுபல பட்டவண்ணம் இருக்கிறேன். பால்வண்ண நிலவே! விரைவில் வருகிறேன்! நான் உனக்குக் கொண்டுவர இருக்கும் அணிகளை அணிந்துகொண்டு, அன்னமென நீ நடந்துசெல்ல, ஆரணங்குகள் பலரும் உன்னைக்கண்டு, பெற்றாள் பெருமைக்குரிய மணாளனை! அதனால் அழகு மயிலாள் ஆனந்த வாழ்வு பெற்றாள்! என்று புகழ்ந்துரைக்கக் கேட்டு, அன்று உன்னை, முதன் முதலாக முந்திரிச் சோலையிலே, அந்திசாயும் வேளையிலே தொட்டிழுத்து முத்தமிட்டேனே துணிவுடன், நீயும், துரையே! இதென்ன துடுக்குத்தனம் என்று, கொதித்துக் கூறுவதுபோலத் துவக்கி, மறுகணமே, புன்னகையுடன் என் மார்பகத்தில் சாய்ந்தனையே, அன்று கண்ட இன்பத்துக்கு இணையான இன்பம் பெறுவேன்! அதற்கே, இந்தப் பிரிவு! அஞ்சாதே! நெஞ்சில் உறைபவளே! வழிமேலே விழிவைத்துக் காத்துக் கிடக்கிறாயே, வஞ்சி! உனைவிட்டுச் சென்றவன், அப்படி என்னதான் கொண்டுவந்து உன்முன், குவித்திடப்போகிறானோ! என்று மகளிர் சிலர் எள்ளி நகையாடிப் பேசுவதாகக் குறித்திருக்கிறாய். கேலி பேசிய அந்தப் பாதிமதியினர், அகலக் கண் திறந்து ஆச்சரியம் கொள்ளத்தக்க விதத்தில், நான் உனக்கு, ஆடை அணி கொண்டுவந்து தருகிறேன். தந்து, உன்னிடமிருந்து பெறவேண்டியதைப் பெறுகிறேன்!!

பொருள் தேடச் சென்ற தலைவன், பிரிவாற்றாமைப் பெருந்துயரில் சிக்குண்ட தலைவிக்கு இதுபோலன்றோ மடல் எழுதுவான். ஏந்திழையின் உள்ளத்திலே எத்தனை எத்தனையோ சுவைமிகு எண்ணங்கள் கூத்தாடும். பிறகோர் நாள், திரும்பிய தலைவன் தலைவிக்கு எண்ணற்ற முத்தங்களை தந்துவிட்டு, தத்தை மொழியாளே! உனக்கென நான் ஏதேதோ தேடிப் பெற்றுவர வேண்டுமென்றுதான் படாதபாடுபட்டேன், எனினும் உன் அழகுக்கு ஏற்ற அணிபணி கொண்டுவந்தேனில்லை; முயன்று பார்த்தேன், முடியவில்லை! செல்வம் குவிந்திடும் செய்தொழிலால் என்று எண்ணினேன்; ஆனால் ஏய்ப்பவன் இழுத்த பக்கமே செல்வம் செல்கிறது; உழைப்பவனை உதாசீனம் செய்கிறது என்ற உண்மையைத்தான் கண்டேன்; உனக்கு ஏமாற்றம் தருகிறேனே என்று எண்ணும்போது, துக்கம் துளைக்கிறது,

★ படமும் பாடமும் (2)

வெட்கம் வேலாகக் குத்துகிறது; என் செய்வேன்! என்றால், உனக்கென்று கொண்டுவரமுடிந்தது இது ஒன்றுதான்,'' என்று கூறியபடி, அவளிடம் ஒரு கைவளையோ காலுக்குத் தண்டையோ, கூந்தலிற் செருகிக்கொள்ள ஒரு திருகோ, கழுத்திலே பூட்டிக்கொள்ள ஒரு மாலையோ, மட்டும் கொடுத்திடுகிறான் என்றால், அவன் இதய ராணி, "செச்சே! இதுதானா! இவ்வளவுதானா! உமது ஆற்றல் இதற்குத்தானா பயன்பட்டது! இந்த இலட்சணத்துக்கா, ஈராறு மாதங்கள் உழைக்கிறேன், உழைக்கிறேன்-கொண்டு வந்து குவிக்கிறேன் குவிக்கிறேன் என்றெல்லாம் கூறிக்கூறி என்னை ஏய்த்து வந்தீர்! எங்கோ வெளியூர் சென்றிருக்கிறார் மணவாளர், எனக்காகக் கரியும் பரியும் கட்டித் தங்கமும் கல்லிழைத்த நகைகளும் கொண்டுவரப்போகிறார் என்றெல்லாம் கூவிக் கிடந்தாயே, விவரமறியாதவளே! உன் கணவன் கொண்டுவந்தது இதுதானா!! என்று என் தோழிகள் கேலி பேசுவரே என்றெல்லாமா, பேசுவாள்! "அன்பே! திரும்பிவந்து உமது அன்பைப் பொழிந்தீரே, அது போதும் எனக்கு! உமது புன்னகையை எனக்களித்துவிட்டீர், அதனினும் மேலான அணியும் பணியும் அவனியில் உண்டா? இந்த நகைகூட, எனக்கு நீர் கொண்டுவந்திராவிட்டாலும், நான் வருத்தப்பட்டிருக்க மாட்டேன்! எனக்கு, ஏதேதோ அணிபணிகள் பெற்றுத் தரவேண்டும் என்பதற்காக அல்லவா, கண்காணா நாடு சென்று கடினமான உழைப்பிலே ஈடுபட்டீர், எவ்வளவு அன்பு, உமக்கு என்னிடம் என்று எண்ணும்போதே என் உடல் புளகாங்கிதமாகிவிடுகிறது— என்றல்லவா கூறுவாள்.

அதுபோலத்தான் தம்பி! நூறு இடங்களுக்கு மேல் தேர்தலில் போட்டியிட்ட நாம் 15-இடங்களை மட்டுமே பெற முடிந்தது, என்று துக்கத்துடனும் வெட்கத்துடனும், எடுத்துக் கூறும்போது, நாட்டிலுள்ள நல்லோர், ஆயாசப்பட வேண்டாம்! கிடைத்தது குறைந்த அளவு என்றால் என்ன! உங்கள் முயற்சியின் தரத்தையும் திறத்தையும் கண்டு நாங்கள் மகிழ்கிறோம்! பெற்ற வெற்றி, பெற்றிருக்க வேண்டிய வெற்றியை கவனப்படுத்துவதாக அமைகிறது, கவலைப்படவோ, கலக்கமடையவோ அல்ல! என்று கூறி, நம்மை ஊக்குவிக்கிறார்கள், உற்சாகப்படுத்துகிறார்கள்! நமக்கு—அதிலும் குறிப்பாக எனக்கு இவ்வளவு குறைந்த அளவு மட்டுமே கிடைத்ததே என்ற எண்ணம் ஒவ்வொரு கணமும் நெஞ்சைக் குடைகிறது—என்றாலும், இந்த வெற்றியை எங்ஙனம் காதலன் கடும் உழைப்புக்குப் பிறகு, கொண்டு வந்து கொடுத்திடும், கை வளையையோ, காதணியையோ, அன்பின் காணிக்கை என்ற முறையில், காதலி பெற்று அகமகிழ்ந்து பூரிப்படைவாளோ, அதுபோலவே நாம் பதினைந்தே இடங்களிலே மட்டுமே பெற்ற வெற்றியை, நல்லோர், பெருமைக்குரியதாகக் குறிப்பிட்டு, நம்மைப் பாராட்டுகிறார்கள்.

மலையைக் கல்லி எலியைப்பிடித்தனர்! என்று நம்மைப்பற்றிக் கேவலமாகப் பேசுவோர் இருக்கத்தான் செய்கிறார்கள்—நாடு என்றால், நல்லதும் கெட்டதும், நொந்ததும் வெந்ததும், பலபட இருக்கத்தானே செய்யும். நல்லோர், கூறுவது, மலையைக் கல்லி, எலியைப் பிடித்தார்கள் என்பதல்ல; மலையைக் கல்ல முடிந்ததே, கிடைத்தது எலிதானே என்று கவலைப்படத் தேவையில்லை; மலையைக் கல்லும் ஆற்றலையும், கல்ல முடியும் என்ற நம்பிக்கையையும் பெற்றீர்களல்லவா, அது சாதாரணமானதல்ல; பெற்ற வெற்றி, இனிப் பெறவேண்டிய வெற்றிக்கு அச்சாரம் என்று கொள்ளுங்கள்; முறை புரிந்துவிட்டது, இனி அடுத்த முயற்சி பலன் அதிகம் பெற்றுத் தரும், என்று கூறி வாழ்த்துகிறார்கள்.

மலையைக் கல்லினோம் — எலிதானே கிடைத்தது, என்று நானே கூடச் சிறிதளவு சோகமாகக் கூறும்போது, அந்த நல்லவர்கள், "இதற்கேன் கவலைப்படுகிறாய்! என்றுமே உன்னைப்பற்றியும் உன் முயற்சிகளைப்பற்றியும் குறைத்து மதிப்பிட்டுக்கொண்டு, இழிமொழியைக் கக்கிக்கக்கி தமது நெஞ்சிலே உள்ள பாரத்தைக் குறைத்துக்கொள்ளுபவர்கள் தானே, இப்போதும், மலையைக் கல்லினார்கள் எலிபிடித்தார்கள் என்று ஏளனம் செய்கிறார்கள்—சொல்லட்டுமே அதனால் என்ன, மலையைக் கல்லினார்கள், எலியைப் பிடித்தார்கள் என்று அவர்கள் சொன்னால், வலையை வீசினார்கள் பாசியைப் பெற்றார்கள்; குப்பையைக் கிளறினார்கள் குண்டூசியைக் கண்டெடுத்தார்கள் என்று ஏதாவது திருப்பிச் சொல்லிவிட்டுப் போயேன், என்று கூடச் சொல்லித் தருகிறார்கள். நான்தான் தம்பி! பதில் கூறிக் காலத்தை வீணாக்கிக்கொள்வதில்லையே!! அதனால், மலையைக் கல்லி எலி பிடித்தார்கள்; மண்ணைக் கவ்வினார்கள், செம்மையாக உதைபட்டார்கள், என்றெல்லாம், சிலர் பேசுவது கேட்டு, பதில் அளித்திடாமல், அவர்கள் அவ்விதமாகப் பேசுவதை, நாம், நமது கழகத்துக்கு எந்த வகையிலே பயன்படுத்திக்கொள்வது என்ற ஆராய்ச்சியிலே ஈடுபடுகிறேன், அது பலன் அளிக்கிறது; நிச்சயமாகவே!!

நாடு, நாம் பெற்ற இடங்கள் பதினைந்து என்றபோதிலும், அது குறித்துத்தான் பேசுகிறது—ஏன் இவ்வளவு குறைவாகப் பெற்றார்கள் என்று ஒரு சாராரும்—இவ்வளவுதானா பெற முடிந்தது என்று மற்றோர் சாராரும்—இவ்வளவு கூட எப்படிக் கிடைத்தது என்று வேறோர் சாராரும்—இவ்விதம் பல்வேறு வகையாக—நாடு பேசுகிறது!! இதன் பொருள் என்ன? நாட்டவரின் விழி, நம்மீது இருந்த வண்ணம் இருக்கிறது, என்பதல்லவா பொருள்!

அந்த 'நிலை'யை அடைவதென்பது," சாமான்யமானது அல்ல, என்பதை அரசியல் தெளிவு படைத்தவர் அனைவரும் அறிவர். அந்த 'நிலை'யைப் பெற முடிந்தது நமது கழகத்துக்கு, நாட்டு மக்கள் கூர்ந்து நோக்கி, மதிப்பிட்டுப் பார்க்கத்தக்க கட்டம் வந்திருக்கிறது என்பதனால்தான். நாட்டிலே உள்ள நல்லவர்கள், பதினைந்து இடங்களிலே நாம் பெற்ற வெற்றியை, காதலன் தன் காதலிக்குத் தந்த பரிசுப் பொருள் போன்றது என்ற முறையில் மகிழ்ந்துகொண்டாடி, வரவேற்பளித்து வாழ்த்துகிறார்கள்.

வாட்போரில் ஈடுபட்ட இரு வீரர்களில், வென்றான் ஒருவன், வீழ்ந்தான் மற்றவன் என்றால், வீர மரபு அறிந்தவனாக வென்றவன் இருந்தால், வீழ்ந்தவனை கேலி செய்யமாட்டான்; வீழ்ந்துவிட்டான் இம்முறை எனினும்,

அவன் நல்ல திறமை பெற்றிருக்கிறான், மிக மிகக் கஷ்டப்பட்ட பிறகே அவனை வீழ்த்த முடிந்தது, வீச்சு முறை நேர்த்தியாக இருக்கிறது, மேலும் சிலகாலம் பயிற்சி இருந்தால், நம்மை நிச்சயம் வீழ்த்தியிருப்பான் என்று எண்ணிக்கொள்வான். இடி இடியெனச் சிரித்து, ஏடா மூடா, என்னிடமா போரிடத் துணிந்தாய்! என் வாள் வீச்சுக்கு முன்பு நீ எம்மாத்திரம்? பிழைத்தோடிப் போ! இனி, உன் கரத்தால் கத்தியைத் தொடாதே! —என்று கடுமொழியைச் செருக்குடன் வென்றவன் பேசுகிறான் என்றால், அவன் வீர மரபு அறியாதவன் என்று விவேகிகள் கூறுவர். தம்பி! வென்றவன் நம்மைப் பார்த்து வீழ்ந்தவனே! என்று கேலி பேசிடக்கூட இல்லை! ஆனால் 'வென்றவனுடன் இருந்தோம்' என்பதை பெறுவதற்கரிய விருது என்று எண்ணிக்கொள்பவர்கள், நம்மை கேலி பேசுகின்றனர், வீழ்ந்தாயா! வீழ்ந்தாயா! செம்மையாக விழுந்ததா அடி!! ஹை, ஹை! ஹி,ஹி! ஹா, ஹா! என்று கூவுகிறார்கள் —அதனை வீர முழக்கம் என்று வேறு எண்ணிக்கொள்கிறார்கள்.

வீரர் இருவர் குறித்த எடுத்துக்காட்டினைத் தொடர்ந்து கற்பனை செய்து பார், தம்பி! வென்றவன், வீழ்ந்தவனுடைய வீச்சுத் திறமையை வியந்துகொண்டிருக்கும் வேளையில், வேறோர் ஆசாமி அங்கு வந்து, கெக்கலி செய்தபடி "வீழ்ந்தாயா, வீழ்ந்தாயா! வேண்டும்! வேண்டும்! தலை வேறு உடல் வேறு ஆகியிருக்க வேண்டும், ஏதோ தப்பித்துக்கொண்டாய்! வாட்போர் ஒரு கேடா உனக்கு!" என்று கேலி பேச, "ஐயா! யாரோ நீவிர்" என்று வீழ்த்தப்பட்ட வீரன் கேட்கும்போது, "தெரியவில்லையா பயலே! நான்தான் உன்னை வீழ்த்திய வீரன், கைவாளுக்குத் தைலம் பூசியவன்! இப்போது தெரிந்துகொள், நீ, யாரால் தோற்கடிக்கப்பட்டாய் என்பதை" என்று கூறினால், வென்றவன், வீழ்த்தப்பட்டவன் எனும் இரு வீரருமேயன்றோ, கைகொட்டிச் சிரித்தபடி, "பலே! பலே! வீரதீர கெம்பீரச் சிங்கமே! வாழ்க! வாழ்க!" என்று கூறுவர்.

அதுபோலத்தான், 150-இடங்களைப் பிடித்த காங்கிரஸ், 15-இடங்களை மட்டுமே பெறமுடிந்த, நம்மிடம் வாள்வீச்சுத் திறமை வகையாக இருக்கிறதே என்றெண்ணிவியந்துகொண்டிருக்கும் வேளையில், காங்கிரசுக்குத் தேர்தல் களத்திலே வாளுக்குத் தைலம் பூசிக்கொடுக்கும் திருப்பணியாற்றியவர்கள், "வீழ்ந்தாயா! வீழ்ந்தாயா!என்று நம்மை நோக்கி நையாண்டி செய்கிறார்கள். காங்கிரசும், இந்தக் 'கேலிகூத்து' கண்டு கைகொட்டித்தான் சிரிக்கிறது! நாம் அதுகூடச் செய்வது, நேரக்கேடு என்று கருதி, 150-இடங்களைக் காங்கிரசினால் எப்படிப் பெறமுடிந்தது, நாம் ஏன் 15-இடங்களை மட்டுமே பெற்றோம், நமது முறையிலே என்ன கோளாறு இருக்கிறது, என்பதைக் கண்டறிந்து, எதிர்காலத்துக்கான காரியத்தை உருவாக்குவதிலே ஈடுபடுகிறோம்.

150 இடங்களிலே வெற்றி பெற்ற காங்கிரசுக்கு, நிச்சயமாகத் தெரியும் பதினைந்தே இடங்களைப் பெற்ற நமது கழகம், எந்த அளவுக்குத் தேர்தல் களத்திலே திறமையைக் காட்ட முடிந்தது, என்ற உண்மை; இடையே இருந்தவர்கள், யாதறிவர் பாபம்! அவர்கள் அறிந்ததெல்லாம், ஆத்திரம் தீரத் திட்டித் தீர்த்தோம்! ஆபாச அகராதியை ஒப்புவித்துக்காட்டினோம்! அதுவும் மற்றவர் செலவில்!! என்பதுதான் —வேறு என்ன! காங்கிரஸ் அபேட்சகர்களுக்கல்லவா தெரியும், பட்ட கஷ்டம், கொட்டிய பணம்; கால்கடுக்கச் சுற்றியவர்களுக்குத்தானே எரிச்சல் தெரியும்—கையும் மனமும் வலிக்க வலிக்கப் பணத்தைக் கரைத்தவர்களுக்குத்தானே அதன் கஷ்ட நஷ்டம் தெரியும் — இடையே இருந்தவர்களுக்கு என்ன! வாய் வலிக்க நம்மைத் திட்டினார்கள், அவ்வளவுதானே! இதில் என்ன கஷ்டம் அவர்களுக்கு! வழக்கமாகச் செய்துகொண்டு வருகிற காரியம்—அது தவிர வேறு எந்தக் காரியத்திலும் அவர்களுக்கு நாட்டமே செல்லமுடியாத அளவுக்கு, அந்த ஒரு காரியத்தில் ஈடு எதிர்ப்பற்ற திறமை பெற்றல்லவா விளங்குகிறார்கள்!

காங்கிரஸ் கட்சி நாம் 15-இடங்களில் மட்டும்தானே வெற்றி பெற்றோம், என்று கேவலமாகக் கருதவுமில்லை; அலட்சியமாக இருந்துவிடவுமில்லை, மாறாக ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்; தோல்வி ஏற்பட்ட காரணங்கள் குறித்து விளக்கம் கேட்கிறார்கள். தம்பி! காஞ்சிபுரம் தொகுதியில், காங்கிரஸ் தோற்றதன் காரணத்தைக் கண்டறிந்து, நிலைமையைச் சரிப்படுத்துவதற்காகவே அமைச்சர் ஒருவர் தமது அலாதியான அறிவாற்றலைச் செலவிட்டிருக்கிறார்!!

திராவிட முன்னேற்றக் கழகத்தை நாங்கள் குறைத்து மதிப்பிட்டுவிட்டோம், அதனால்தான் எங்களுக்கு இவ்வளவு தொல்லையும் தோல்வியும் வந்தன, என்று கம்யூனிஸ்டு வட்டாரம் கருதுவதாகப் பத்திரிகைச்செய்தி ஒன்று பார்த்தேன்.

பிரஜா-சோஷியலிஸ்டு கட்சியின் தலைவரும் என் நண்பருமான சின்னதுரை, திராவிட முன்னேற்றக் கழகம் 'கூட்டாக' இருந்து தேர்தலில் ஒரு அணி ஏற்படுத்தாதுபோனதனால்தான், காங்கிரஸ் இத்தனை இடங்களைப் பிடித்துக்கொண்டது என்று கூறுகிறார்.

சோஷியலிஸ்டு வட்டாரத்திலும், இதுபோன்றே கருதப்படுவதாக அறிகிறேன்.

தேர்தல் களத்திலே ஈடுபட்ட ஒவ்வொரு கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற வெற்றி 15 இடங்களிலேதானே, என்று அலட்சியம் காட்டவில்லை; ஆராய்கிறார்கள்; மேற்கொண்டு எடுத்துக்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்துப் பேசுகிறார்கள்; தைலம் தடவியவர்கள் மட்டும்தான், கேலி பேசுகிறார்கள், 15 இடங்கள்தானே என்கிறார்கள். புலியுடன் போரிட்டு, உடலெங்கும் புண்ணாகிக்கிடக்கும் வீரனை, பாராட்டுவர், கேலி பேசமாட்டார்கள். அஃதேபோல, இன்றளவு வரையில் 'இந்தியாவிலே' ஏக சக்ராதிபத்யம் செய்வதற்கான கட்சி என்று புகழப்பட்டுவரும் காங்கிரசைத் துணிந்து எதிர்த்து நின்று, பதினைந்து இடங்களில் வெற்றிபெற்ற நமது கழகத்தைக் கேலி பேசுகின்றனர் — பேசுபவர்கள், 'எங்கள் ஆற்றலைக் காணீர்! நாங்கள் காங்கிரஸ் கட்சியை ஓட ஓட விரட்டி அடித்தோம், எல்லா இடங்களிலும் வெற்றிக்கொடி நாட்டினோம், என்று பட்டியல் காட்டுகிறார்களா, என்றால், அதுதான்

இல்லை! போகட்டும், பாவம், நம்மைக் கேலி செய்வதன் மூலம், தமக்கோர் "தெம்பு" தேடிக்கொள்கிறார்கள்.

தம்பி! பதினைந்து இடங்களிலே மட்டுமே வெற்றி பெற்றோம்; இது நமக்கு ஏமாற்றத்தைத் தரத்தான் செய்கிறது; எனக்கோ பெரியதோர் ஏமாற்றத்தைத் தருகிறது. போட்டியிட்ட இடங்களிலெல்லாம் வெற்றி பெற்றுவிடுவோம் என்று நான் எண்ணி ஏமாற்றம் அடையவில்லை. நான் குறைந்தது 30 இடங்கள் மட்டிலுமாவது கிடைக்கும் என்று கணக்கிட்டிருந்தேன். பதினைந்துதான் கிடைத்தது, இது எனக்கு வேதனைதரத்தான் செய்கிறது. இந்த வேதனை எனக்கு எப்போது குறைகிறது என்றாலோ இதற்கும் வக்கற்றுப்போய், இருகொடி ஏந்திகளாகி, அழையாமலே நுழைந்துகொண்டு, தேர்தல் முரசாகப் பயன்பட்டவர்கள், பதினைந்துதானா! பதினைந்தே பதினைந்துதானா என்று பரிகாசம் பேசுகிறார்களே, அப்போதுதான் குறைகிறது! இப்படியும் சில விசித்திர சித்தர்கள் இருக்கிறார்களே என்பதைக் காணும்போது, எனக்கு வேதனை மறைகிறது, வேடிக்கையாக இருக்கிறது.

தம்பி! பத்து ஆண்டுகளாகத் தொடர்ந்து பதவியில் இருந்தும், பலபல கொடுமைகளை இழைத்தும் இந்த முறையும் நாட்டு மக்கள், காங்கிரசு கட்சியையே 'ஆளவந்தார்'களாக்கிவிட்டனர். **மான்செஸ்டர் கார்டியன்** பத்திரிகை, இதுகுறித்து வியந்து பாராட்டி எழுதுகிறது. கார்டியன் வியப்புடன் இதனைப் பாராட்டுவதற்குக் காரணம், ஜனநாயகத்திலே பண்பட்ட பிரிட்டன் போன்ற நாடுகளிலே, மக்கள் விழிப்புணர்ச்சியுடன் இருக்கிறார்கள். ஆளும் கட்சி, அறிவீனத்தாலோ, அகந்தையாலோ, அலட்சியத்தினாலோ, மக்கள் நலனுக்கு ஊறு நேரிடும் காரியம் செய்துவிட்டால், மக்கள் சீறி எழுந்து ஆளும் பொறுப்பை மீண்டும் அந்தக் கட்சியிடம் தர மறுக்கிறார்கள். இங்கோ காங்கிரஸ் கட்சி ஆயிரத்தெட்டு தவறுகளைப் புரிந்தும், பொறுப்புமிக்க தலைவர்களும், பொறுப்புள்ள பத்திரிகைகளும் அத்தவறுகளைக் காட்டி இடித்துரைத்தும், ஓட்டுகளை மட்டும் காங்கிரசு கட்சியினால் தட்டிப் பறிக்க முடிகிறது! இதுதான், மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகைக்கு வியப்பாக இருக்கிறது. இது ஒருபுறம் இருக்கட்டும்; நான் கூறவந்தது தம்பி! இப்படி மக்களிடம் ஓட்டுகளைத் தட்டிப்பறிக்கும் 'மகத்துவத்தை' இன்றும் குன்றாமல் பெற்றிருக்கும் ஒரு பலம் பொருந்திய கட்சியுடன் போட்டியிட்டு நாம் பதினைந்து இடங்களைப் பெற்றோம்; அதனை, காங்கிரஸ் கட்சியின் எதிர்ப்பு எனும் சூறாவளியில் சிக்கினால் புயலிற்பட்ட கலமாவோம் என்று அஞ்சி ஒதுங்கிக் கொண்டவர்களும், அடிபணிந்து அக்காரவடிசல் பெற்றவர்களும், கேலியாகப் பேசிக்கொண்டு போகட்டும்; தங்கள் இயலாமையை இதன் மூலம் காட்டிக்கொள்கிறார்கள்.

காங்கிரஸ் கட்சிக்கு இன்றளவும் பத்திரிகை பலம், பிறர் கண்டு வியந்திடத்தக்க அளவு இருந்திடக் காண்கிறோம்.

முதலாளிகள், தங்கள் இலாப வேட்டைக்கு வாய்ப்பும் வசதியும் பெற, காங்கிரசை ஆதரிக்கவேண்டும் என்ற தத்துவத்தைப் பொன்னெனப் போற்றி வருகிறார்கள்.

டாட்டா போன்றாரின் பணப் பெட்டிகள், காங்கிரசின் ஓட்டுப் பெட்டிகளுக்குத் துணையாக நிற்கின்றன.

இவ்வளவு 'வல்லமை' படைத்த ஒரு கட்சியை, தோள்வலியும் வாள் வலிவும் படைத்த ஓர் தூர்த்தனை, தொலைவிலிருந்து 'கவண்கல்' வீசியே வீழ்த்த முற்பட்ட அஞ்சாநெஞ்சனைப்போல், வசதியற்ற நிலையையும் மறந்து, நாம் எதிர்த்து நின்றோம். எமது கோபப்பார்வை போதும் இவர்களைச் சுட்டுச் சாம்பலாக்க என்று கொக்கரித்தனர்; கலங்கினோமில்லை; தேர்தலில் ஈடுபடுவது ஜனநாயகக்கடமை, வெற்றி பெற்றே தீரவேண்டும் என்றுஒன்றும் இல்லை, கூடுமானவரையில், முடிந்த அளவு, பலமான எதிர்ப்பினை உருவாக்கிக் காட்டப்போகிறோம் என்று கூறிவிட்டு, களத்தில் இறங்கி, கடமையைச் செய்தோம், 15 இடங்களில் வெற்றி கிடைத்தது. மற்றவர்கள் கண்டு, புகழ்ந்திட, வியந்திடவேண்டிய சம்பவமே தவிர, கேலி பேசும் சம்பவமாகுமா இது!!

பதினைந்து இடங்கள்தான் பெற்றோம், ஆனால், மொத்தமாக நமக்குக் கிடைத்துள்ள ஓட்டுகள், சாமான்யமல்லவே! கட்சி என்ற முறையில், காங்கிரசுக்கு அடுத்தபடியாக சென்னை ராஜ்யத்தில் தி. மு. கழகமே 'ஓட்டுகள்' பெற்றிருக்கிறது என்பதை, வியந்தே, பல இதழ்கள் எழுதியுள்ளன.

கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற பழமொழி போலல்லவா இது இருக்கிறது, இடங்கள் அதிகம் கிடைக்காவிட்டாலும் ஓட்டுகள் ஏராளம் கிடைத்தன என்று 'விண்ணாரம்' பேசுவது என்று, சிலர் கூறக் கூடும்.

ஒரு ஜனநாயக நாட்டிலே இடங்கள் ஒவ்வொரு கட்சிக்கும் எத்தனை எத்தனை கிடைத்தன என்பதை மட்டுமல்ல, ஓட்டுகளின் எண்ணிக்கையையும் கூர்ந்து பார்த்துத்தான், அரசியல் போக்கு, எப்படி உருவாகிறது என்பதைத் தெரிந்துகொள்வார்கள்—எதிலும் தெளிவு வேண்டும் என்ற கொள்கைகொண்டவர்கள். அந்த முறையிலே, தி. மு. கழகம், பெற்றிருக்கும் ஓட்டுகளின் எண்ணிக்கை, பலப்பல அரசியல் தலைவர்களை, மலைக்கச் செய்திருக்கிறது. அதனை மறைத்துச் சிலர் பேசுவர், உண்மையை நேருக்கு நேர் சந்திக்கக் கிலிகொள்பவர்கள், உள்ளதைக் காண மறுக்கிறார்கள்.

உலகமே, ஒரு ஒப்பற்ற சம்பவமாகக் கருதத் தக்க விதத்தில், கேரளத்தில் கம்யூனிஸ்டு கட்சி மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது — ஆளும் கட்சியாகிவிட்டது.

ஆச்சரியத்தால் மூர்ச்சையானவர்கள், அச்சத்தால் தாக்குண்டவர்களும், கலக்கத்தை மறைத்துக்கொண்டு, கம்யூனிஸ்டுகள் இனிப் பெட்டிப் பாம்புதான் என்றும், சட்டசபை அவர்களுக்குச் சிறைக் கூடமாகிவிடும் என்றும் அதைச் செய்வோம் இதைச் செய்வோம் என்று கொட்டி அளந்து வந்தார்களே, கொடி தூக்கிக்கொண்டு, இதோ இனி என்ன சாதிக்கப் போகிறார்கள் பார்த்துவிடுவோமே இவர்களின் ஆற்றலை என்றும், பலவிதத்தில் பேசி, தோல்வியால் ஏற்பட்ட துயரத்தை மறைத்துக்கொள்ள முற்பட்டிருக்கின்றனர், மூக்கறுபட்டவர்கள்—ஆனால், உலக வரலாற்றிலேயே, நேருபண்டிதரின் புகழ் உலகில் எங்கும் பரவியிருக்கும் நேரத்தில், பாரில் எமது நேரு

வுக்கு நிகர் யாரே! என்று பாவாணர்கள் பாடிடத் தக்க நிலை இருக்கும்போது, அவருடைய பெரும் புகழொளி கண்டும் மயங்கமாட்டோம், காங்கிரசுக்கு அடிபணிய மறுக்கிறோம் என்று துணிந்து கூறி, கம்யூனிஸ்டு ஆட்சிக்குக் கேரளம் அழைப்பு விடுத்துள்ள சம்பவம், அகில உலகும் அச்சமோ ஆயாசமோ, உணர்ச்சியின் வகை எப்படிப்பட்டதாக இருப்பினும் கூர்ந்து கவனிக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்; வரலாற்றிலே பொறிக்கப்படத்தக்க சம்பவமாகும்.

பளிச்சிட்டுத் தெரியும் இந்தச் சம்பவத்துக்கே, 'இந்து' இதழ் புள்ளிவிவரத்தின் துணையைத் தேடி, இடம் அதிகம் கிடைத்திருக்கிறது, என்றாலும் கம்யூனிஸ்டுக் கட்சிக்குக் கிடைத்துள்ள ஓட்டுகள், காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்ததைவிடக் குறைவுதான்! என்று வாதாடுகிறது. **கம்யூனிஸ்டு கட்சிக்கு 19,89,369—காங்கிரசுக்கு 21,62,000 ஓட்டுகள்.**

கேரளத்துச் சம்பவத்துக்குப் பயன்படும், வாதம், தி. மு. கழகத்துக்குக் கிடைத்த இடங்கள் பதினைந்துதான் என்றாலும், கிடைத்த ஓட்டுகள் ஏராளம் என்று கூறும் போதுமட்டும், சொத்தை வாதம், மீசையில் மண் ஒட்டவில்லை என்பதுபோன்ற பேச்சு, என்று எப்படி ஆகிவிடும்.

தம்பி! உன் அரிய உழைப்பும் பிறர்கண்டு பாராட்டத்தக்க ஆற்றலும், வீண்போகவில்லை; நாட்டு மக்களை நித்த நித்தம் சந்தித்து உரையாடி, நமது கொள்கைகளை எடுத்துக்கூறியது பலன் அளிக்காது போய்விடவில்லை; இந்தத் தேர்தலில் மொத்தத்தில் நமக்கு 16 இலட்சத்துக்கு மேல் ஓட்டுகள் கிடைத்துள்ளன; ஏ! அப்பா! எத்தனை விதமான எதிர்ப்புகளுக்குப் பிறகு தாக்குதல்கள் எவ்வளவு கீழ்த்தரமானவை, எவ்வளவு ஈனத்தனமான செயல்களால் நம்மை அழிக்க முனைந்தனர், எவ்வளவு மிருகத்தனமான முறைகளைக் கையாண்டனர். தப்பித் தவறி காட்டு வழி சென்றுவிட்டவனைத் தாக்க மிருகங்கள் எப்படிக் கிளம்புமோ, அப்படி அல்லவா, நமது கழகத்தின்மீது பலரும் பாய்ந்தனர்; என்னென்ன பழிச்சொற்கள், எவ்வளவு வதந்திகள்! இவ்வளவுக்கும் நாம் கலங்காதிருந்தோம் என்பதல்ல ஆச்சரியம், இவ்வளவு பேச்சுக்களையும் துச்சமானவை, குப்பை கூளம், நொந்துபோன உள்ளத்திலிருந்து கிளம்பும் நாராசம் என்று கருதி, மதிப்பளிக்க மறுத்து, நாட்டு மக்களில் 16-இலட்சம் பேர், நமது கழகத்துக்கு ஓட் அளித்தனரே. அது அல்லவா ஆச்சரியம். மான்செஸ்டர் கார்டியனுக்கு இதுதெரியாது; இப்போது தெரிவித்தாலும் புரியாது. ஆனால் இவ்வளவு எதிர்ப்பு நெருப்பை நீந்தி, நம்மில் பதினைந்து பேர், வெற்றியை அடைந்தோமே, அது நேர்மை உள்ளம் படைத்த அனைவருக்கும், நம்மிடம் உள்ள மதிப்பினை, நிச்சயமாக அதிகப்படுத்தி இருக்கிறது என்பதிலே ஐயமில்லை.

நமக்கு எவ்வளவு எதிர்ப்புக்குப் பிறகு இத்துணை ஓட்டுகள் கிடைத்தன என்பது மட்டுமல்ல, நான் உன்னைக் கவனிக்கச் சொல்வது, நாம் எவ்வளவு தவறுகள் செய்திருக்கிறோம், அவ்வளவுக்கும் பிறகு நமக்கு இந்த அளவு ஆதரவு திரண்டதே அதனைக் கவனிக்கச் சொல்லுகிறேன்.

என்னைப் பொறுத்த வரையிலும் சரி என்னுடன் மிக அதிகமாக நெருங்கிப் பழகிடும் என் தம்பிமார்கள் பலரைப் பொறுத்த வரையிலும்கூட, கடந்த பத்து பதினைந்து ஆண்டுகளாகவே தேர்தலில் ஈடுபடுவது என்றாலே, ஒரு விதமான 'கசப்பு' இருந்து வந்தது. ஓட்டுகேட்பது என்பதையே ஏதோ செய்யத்தகாத, செய்யத் தேவையற்ற ஒரு காரியம் என்று கருதி வந்திருக்கிறோம். இந்த நாட்டு மக்கள் யார் எதைச் சொன்னாலும், இனிக்க இனிக்கச் சொன்னால் எதனையும் நம்பிவிடுகிறார்கள், நாம் கூறும் உண்மைகளோ மக்களுக்குக் கசப்பாகவும் கிலி மூட்டுவதாகவும் இருக்கின்றன, அதனாலேயே, நம்மை அவர்கள் வெறுக்கிறார்கள், இந்த நிலையில் அவர்கள் நமக்கு ஓட்டுத் தருவார்களா என்ன! செச்சே! நமக்கேன் பல்லிளிக்கும் வேலை! பொறி பறக்கப் பேசுவோம்! அச்சம் தயை தாட்சணியத்துக்கு இடம் வைக்காமல் பேசுவோம்! கேட்டால் கேட்கட்டும், கேட்காவிட்டால் நாசமாய்ப் போகட்டும்! ஊதுகிற சங்கினை ஊதுவோம், பொழுது விடிகிறபோது விடியட்டும்! என்று இவ்விதமாகவெல்லாம் நினைத்துக்கொண்டு இயக்கப் பணியாற்றிக் கொண்டு வந்திருக்கிறோம். அப்படிப்பட்ட நாம் தேர்தலில் ஈடுபட்டபோது, அதிலே மிகுதியான சுவையும், அந்தச் சுவை மட்டுமே தரக்கூடிய சுறுசுறுப்பும், எங்ஙனம் பெற முடியும்.

உன்னிடம் கூறிக்கொள்வதிலே தவறு என்ன தம்பி! நான் காஞ்சிபுரம் தொகுதியில், நல்ல முறையில்தான் பணியாற்றினேன், ஆனால், பொதுக்கூட்டத்திலேயும் சரி, தனித்தனியாக மக்களிடம் அணுகியபோதும் சரி 'ஓட்டு' தாச் சொல்லி, கேட்கமுடியவே இல்லை; விருப்பமில்லாததால் அல்ல முறை தெரியாததால்! உடன் வந்தவர்கள்தான் பேசுவர், நான், நாக்கு கட்டுண்ட நிலையில் நிற்பேன்; மெத்தச் சிரமப்பட்டு, நான் சொல்லக் கூடியதெல்லாம்,

பார்த்துச் செய்யுங்கள்
கூட இருங்கள்
வரட்டுமா!
என்ன? செய்கிறீர்களா!

என்ற இவைகளேதான்! மேலால் பேசமுடியவில்லை—தெரியவில்லை. அது போன்றே, நான் பேசிய பொதுக்கூட்டங்கள் ஏராளம்—இரண்டே இரண்டு கூட்டங்களிலேதான், எனக்கு 'ஓட்டு' போடுங்கள் என்று கேட்க முடிந்தது—உதய சூரியன் பெட்டியில் ஓட்டு போடுங்கள் என்று கேட்டேன், உடனிருந்த நண்பர்கூட, அப்பா! பரவாயில்லையே! அண்ணா ஓட்டு போடச் சொல்லிகேட்டுவிட்

டாரே! என்று வேடிக்கையாக வியந்துரைத்தார்!

என் நிலை தானே, நமது அபேட்சகர்களிலே பலருக்கும் இருந்திருக்கும். பல ஆண்டுக் காலமாக

பொறிபறக்கப் பேசுவது
கண்டதுண்டமாக்கிக் காட்டுவது
எதிர்ப்பு வாதங்களை முறியடிப்பது
விளக்கம் தருவது
வீரமுழக்கம் புரிவது
வரலாற்றுச் சம்பவம் தருவது

போன்ற முறைகளிலேயே பழகிப் போயிருக்கிறோம். அப்படிப்பட்ட நாம் மக்களிடம் கனிவாகப் பேசி, அவர்கள் அலட்சியம் காட்டினால் தாங்கிக்கொண்டு, புரியாதவர்களாக இருந்தால் பொறுமையை இழக்காமல், ஓட்டு கேட்கும் முறையை, எப்படி எளிதாகக் கற்றுக்கொள்ள முடியும். கேள், தம்பி! என் கதையை!! தங்கவேலர், என்னை 'ஓட்டு' கேட்பதற்காக, முதல் நாள் கோவிந்தவாடி என்ற கிராமத்துக்கு அழைத்துக் கொண்டு சென்றார்—அழைத்துக் கொண்டு சென்றார் என்று கூறுவதைவிட, இழுத்துக்கொண்டு சென்றார் என்பதுதான்பொருத்தமாக இருக்கும்.

நாலைந்து கிராமத்துப் பெரியவர்களைச் சந்தித்தோம்--சந்தித்தோம் என்று கூறுவதைவிட, எங்களைப் பார்க்கும்படி சிரமப்பட்டு அவர்கள் எதிரில் சென்று நின்றோம்.

தங்கவேலர், துவக்கினார், "இதோ—நம்ம அண்ணாதுரை—நம்ம தொகுதிக்கு நிற்கிறார்--சட்டசபைக்கு—நல்லவர்—படிப்பாளி --தமிழ் நாட்டில் ஒரு தலைவர்—" என்று விவரித்தார்.

கேட்டுக்கொண்டிருந்தவர்கள் முகத்திலே ஒருவிதமான மலர்ச்சியும் இல்லை; எனக்குச் சிறிதளவு வெட்கமாகக் கூட இருந்தது.

சில நிமிடங்கள் தங்கவேலர் பேசிவிட்டு, பிறகு, கிராமத்துப் பெரியவர்களின் பதிலை எதிர்பார்த்தார்! தம்பி! பதில் வெளிவந்தது, நான் பயந்துபோனேன், கோபம் கூடத்தான்!!

"அது சரிங்க! எலக்ஷனுக்கு வருகிற ஒவ்வொருத்தரையும்தான் இந்திரன் என்று சொல்றிங்க, சந்திரன் என்று சொல்றிங்க, நாங்க என்னத்தைக் கண்டோம்!"

இது அவர்கள் அளித்த பதில்! ஓட்டு கேட்கச் சென்ற எனக்கு எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப்பாரேன் தம்பி!

கோவிந்தவாடி, காஞ்சீபுரத்துக்கு வெகுஅருகாமையில் உள்ள சிற்றூர்-ஐந்தாறு மைல்களுக்குத்தான் தொலைவு. அங்கு, இவ்விதம், "வரவேற்பு!" எப்படி இருந்திருக்கும், என் எண்ணம் என்பதை நினைத்துப்பாரேன்!

ஓட்டு கேட்டுக் கேட்டுப் பழக்கமாகி இருந்தால், இவ்வளவு அக்கரையற்றும், 'அலட்சியமாகவும் பேசியவர்களிடம், மளமளவென்று பதில் பேசிடத் தெரிந்திருக்கும். நமது கழகம் தான் தேர்தல் அலுவலில் இதுநாள் வரை ஈடுபடவில்லையே, எனவே பதில் ஏதும் கூறத் தோன்றவில்லை!

தம்பி! இதே கோவிந்தவாடி, எனக்கு 'ஓட்' அளிக்காமல் இருந்துவிடவில்லை; நிறைய அளித்தார்கள்; ஆதரவு கிடைத்தது.

தேர்தல் காரியத்திலே ஈடுபாடு கொண்டு, நாம் சுவையும் சுறுசுறுப்பும் வழியும் வகையும் பெறவில்லை.

பொதுவாகவே ஒரு தேர்தலுக்குத் தேவையான அளவு வசதி இல்லை! அத்துடன் இந்தக் குறை வேறு! இந்த நிலையில் நமக்குப் பதினாறு இலட்சத்துக்குமேல் 'ஓட்டு'கள் கிடைத்தன என்பதிலேதான், வியப்பு இருக்கிறது!

நாமக்கல் அடுத்த சிற்றூர் ஒன்றிலே, மாலை சுமார் ஐந்து மணிக்கு, நான், பேசிக்கொண்டிருக்கிறேன், 'ஏழாம் தேதி! திடீரென்று, நண்பர் சித்தய்யன், என் கரத்திலிருந்த 'மைக்'கை வெடுக்கெனப் பறித்துக் கொண்டு,

ஒரு சந்தோஷமான செய்தி
ஒரு மகிழ்ச்சியான செய்தி
நம்ம அண்ணா எம். எல். ஏ. ஆகிவிட்டார்
எலக்ஷனில் ஜெயித்துவிட்டார்

என்று சிரிப்பும் பேச்சும் குழையக் குழையக் கூறினார்.

தம்பி! கோவிந்தவாடி கிராமத்திலே, நான் கண்ட முதற் காட்சியையும், நாமக்கல் அருகே உள்ளே சிற்றூரில் சித்தய்யன் என்னிடமிருந்த 'மைக்'கைப் பறித்துக்கொண்டு பேசிய காட்சியையும், மனக்கண்ணாலே பார், படமும் தெரியும் பாடமும் கிடைக்கும்.

கோவிந்தவாடி கிராமத்திலே, முதலிலே, எனக்கு ஏற்பட்ட திகைப்பு, வெட்கம், கோபம், சலிப்பு, இவைகளை, என்னுடன் பணியாற்றியவர்கள், மக்களைச் சந்திப்பதிலும் உரையாடி விளக்கமளிப்பதிலும் தனித்திறமையும் தளராத ஊக்கமும்காட்டி விரட்டி அடித்து வெற்றி தேடித் தந்தனர்.

தம்பி! நான் இந்தச் சம்பவத்தைக் கூறுவதற்குக் காரணம், நாம் தேர்தலில் ஈடுபட்டோமே தவிர, அதற்கான பக்குவத்தை, பயிற்சியைப் போதுமான அளவு பெறுவதற்கு நமக்குக் காலம் போதுமான அளவு கிடைக்கவில்லை.

இந்தக் குறைமட்டுந்தானா! நாம்—நான் உட்படத்தான்—பல தவறுகளை விவரமறியாத காரணத்தால் புரிந்திருக்கிறோம்.

தொகுதிகளின் தன்மையை ஆராய்ந்து அறிதல்
எவரெவர் எந்தெந்தத் தொகுதியில் ஈடுபடும் நல்வாய்ப்பு உளது என்பதைத் தெரிந்துகொள்ளுதல்

போன்ற 'அரிச்சுவடி'யே நாம் சரியான முறையில் பெற்றிருந்தோமில்லை.

நமது மாநாடு கூட்டுவதற்கு நாம், 'திடல்' தேடிப் பெறுவதற்கு எடுத்துக் கொள்ளும் முயற்சியைவிட, அதிலே காட்டும் திறமையைவிட, குறைவாகவே, தேர்தல் தொகுதிகளை ஆராய்வதிலும், யார் எந்தத் தொகுதிக்கு என்பதுபற்றி தீர்மானிப்பதிலும், காட்டியிருக்கிறோம்.

இவ்வளவு, 'குறைபாடு'கள் இருந்தும், நாம் பதினாறு இலட்சம் வாக்குகளைப்பெற்றோம்!! வானம்பார்த்தபூமி என்ற நிலையிலேயே விளைச்சல் குறிப்பிடத்தக்க அளவு என்றால், நல்ல பாசனவசதியும் கிடைத்துவிட்டால் விளைச்சல், தரமாகத்தானே இருக்கும்! அந்த முறையிலே எவ்வளவோ

திறமைக் குறைவு
தெளிவுக் குறைவு
வசதிக் குறைவு
அனுபவக் குறைவு

இருந்தும் பதினாறு இலட்சம் 'ஓட்'டுகளுக்குமேல் பெற்றிருக்கிறோம் என்றால், முறையும் சரிவர அறிந்து, வசதிகளையும் தேடிப் பெற்று, தேர்தலில் ஈடுபட்டால், இந்த பதினைந்துகண்டே பதறிப்போகிறார்களே சிலர், அவர்கள் மயங்கிக் கீழே சாய்ந்திடும் அளவுக்கல்லவா, வெற்றியின் எண்ணிக்கை உயரும்!!

வசதிகளைத் தேடிக்கொள்வதற்காகக் கூடிக் கூடிப் பேசினோம்—திட்டம் பல தீட்டினோம்—நானும் வீரதீரமாக வாக்களித்தேன் ஐந்து இலட்சம் திரட்ட வழிகண்டுபிடித்து

(12-ம் பக்கம் பார்க்க)

முன்னேறுவோம்

மலர் 15] ஆண்டு சந்தா ரூ. 8 [7—4—57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 38

கண்டதுண்டோ இதுபோல்! — என்று களிப்பைத் தருவதுபோல, இலட்சக் கணக்கான மக்கள், சிங்காரச் சென்னையின் வெண் மணற்பரப்பிலே திரண்டிருந்த காட்சி உள்ளத்தைத் தொடுவதாயிருந்தது. ஆர்வமிக்க காளையர்! இல்லத்து விளக்குகள் பல்லாயிரம்! எங்கு நோக்கினும், மக்கள் வெள்ளம்! சென்னை, இதுவரை காணாத அளவுக்கு, 31-ந் தேதி நடைபெற்ற கூட்டம் இருந்தது. தி.மு.க. சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளு மன்ற—சட்டசபை உறுப்பினர்களைப் பாராட்டுவதற்காக நடத்தப்பட்ட அக் கூட்டம், களிப்பை மட்டுமல்ல, எத்துணைப் பொறுப்பு நாள்தோறும் நமக்கு வளருகிறது என்பதையும் விளக்கிற்று.

ஒரு காலத்தில் இழித்தும் பழித்தும் பேசப்பட்ட இயக்கத்தவர் நாம். எல்லோராலும் ஒதுக்கப்பட்டவர்களாக நாம் கருதப்பட்ட காலம் உண்டு. ஓரிரு கூட்டங்கள் நடத்துவதென்றாலே எடுத்துக் கொள்ள வேண்டியிருந்த சிரமம் பல, பத்துப் பதினைந்து பேர் கூடுவதே கடினம். அவர்களையும் கல்லும், சாணி உருண்டையும் கொண்டு தாக்குவர் மாற்றார். இப்படிக் கேவலத்துக்கும் கிண்டலுக்கும் ஆளான நிலை மாறி, இன்று நமது கருத்தைக் கேட்க மக்கள் மன்றத்தில் பெருத்ததோர் ஆவல் ஏற்பட்டு உள்ளது. அதனால், என்ன சொல்லுகிறோம் என்று கேட்க இலட்சக் கணக்கில் திரளுவது மட்டுமல்ல, நமது பக்கம் நிற்கவும் தயாராயிருக்கின்றனர் என்பதை நடைபெற்ற தேர்தல் காட்டியிருக்கிறது. "ஏதோ, கூட்டம் போட்டால் கூடிவிடுகிறார்கள். அது போதுமா?" என்று மாற்றுக் கட்சியினர், தமக்கு கூட்டம் வருவதில்லையே என்கிற எரிச்சலில், இழித்துரைப்பதுண்டு. கூட்டத்துக்கு மட்டுமல்ல, நாட்டின் விடுதலைக்காக ஆதரவு காட்டும் எந்தக் கட்டத்துக்கும் நாங்கள் தயார் என்று அறிவிப்பது போல **17-இலட்சம்** மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் நமக்கு! தட்டித் தடுமாடிக் கல்லடியும் சொல்லடியும் பெற்று நாம் வளர்த்த கொள்கைகள் 17-இலட்சம் மக்களின் இதயத்துக்குள் புகுந்துள்ளன. எவ்வளவு பெரிய வெற்றி இது! இதனைப் பெற நமக்குள்ள வசதிகளை எண்ணும்போது, உண்மையில், வெற்றியின் அளவு மிகப் பெரிதாகத் தெரிகிறது.

பதினேழு லட்சம் மக்கள்! காங்கிரசுக்கு அடுத்தபடியாக!! —என்னும் இந்த இரண்டு வாக்கியங்கள், வெறும் எழுத்துக் கூட்டங்களல்ல. இவைகளுக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் தியாக நிகழ்ச்சிகள் ஏராளம்; அணி வகுத்து நிற்கும் இளைஞர் பட்டாளம் மிகப் பெரிது; அவர்கள் கழகத்துக்காக ஒவ்வொரு நாளும் படும் பாடு அளவிடற்கரியது. வாழ்க்கையிலே, தமது பெற்றோர், பெண்டு பிள்ளைகளைவிட, இலட்சியத்துக்காகப் பாடுபடுவதே பெரிதெனக் கருதி அயராது உழைப்போரின் எண்ணிக்கையினை நம்மால் கணக்கெடுக்க முடியாது. வறுமைத் தேள் கொட்டினாலும், வாழ்க்கைப் பாதையில் ஆயிரமாயிரம் வளைவு நெளிவுகள் உண்டெனினும், அவைகளை ஒரு பக்கம் சமாளித்துக் கொண்டு, உணர்ச்சியை எண்ணெயாக்கி, கொள்கையைத் திரியாக்கி, கழகம் எனும் விளக்கில், கொள்கைச் சுடர் எரிய ஒவ்வொரு நாளும் அவர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சி ஏராளம்! ஏராளம்!! இதனால்தான், நாம் அடிக்கடி "இப்படைத் தோற்கின் எப்படை வெல்லும்?", என்று கூறுகிறோம்.

எண்ணற்ற வாலிபர்கள் நமது பக்கம் அணி வகுத்து நிற்பதனை காஞ்சியில் தேர்தல் சமயத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய காங்கிரஸ் அழகேசனே குறிப்பிட்டார்—இளைஞர்கள்தானிருக்கிறார்கள்! ஆனால் அவர்களிடம் ஓட்டு இல்லை!!—என்பதாக. உண்மையில் அவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை அளிக்கப்பட்டிருந்தால், இன்னும் பல இடங்களும், பல லட்ச ஓட்டுகளும் நமக்குக் கிடைத்திருக்கும். இப்போது அவர்கள் ஓட்டர்கள் இல்லை என்றாலும், இன்னும் ஐந்து ஆண்டுக்குப் பிறகு.....! என்று எண்ணும்போது, ஆனந்தமும் நம்பிக்கையும் அதிகமாகிறது, நமக்கு. இதனை ஒத்துக்கொள்வது போல, அண்மையில் தஞ்சையில் தேர்தலுக்குப் பின் கூடிய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள், "தி. மு. க. வில் ஏராளமான வாலிபர்கள் இருக்கிறார்கள். சாமான்யமாக எண்ணிவிடக் கூடாது", என்று. வாலிபப்படையின் வளர்ச்சி, அதிர்ச்சியைத் தருகிறது அவர்களுக்கு. இத்தனைக்கும் தஞ்சை இந்தத் தேர்தலில் கோட்டைபோல ஆகி உளது காங்கிரசுக்கு!! எனினும், இந்தத் தேர்தலில் ஆங்காங்கு நமது தோழர்கள் ஈடுபட்டுப் பணியாற்றிய விதமும் முறையும் அவர்கள் உள்ளத்தில் ஒரு அதிர்ச்சியை உண்டுபண்ணியிருக்கிறது.

அழிக! ஒழிக!—என்று கூச்சல் போடுவதைத் தவிர என்ன அறிவார்கள் இவர்கள் என்று முன்பெல்லாம் கேட்ட பக்தவத்சலம், இப்போது அழிக! ஒழிக! என்று அலற ஆரம்பிக்கிறார். அவ்வளவு தூரம், அவரது இதயத்தை, வளர்ந்துள்ள வாலிபப் படையின் சக்தி கசக்குகிறது. என்ன ஆகுமோ என்று அஞ்சுகிறார்! வளர்ந்துவிட்டார்களே என்று குமுறுகிறார்! அவர் மட்டுமல்ல, தஞ்சை, செங்கற்பட்டு மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகள் மட்டுமல்ல, எங்

கும் இன்று நம்மைப்பற்றிய எண்ணமும், நமது வளர்ச்சியினை எப்படியாவது மட்டுப்படுத்த வேண்டும் என்கிற ஆசையும் எழாமலில்லை. கோவை மாவட்ட காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொண்ட சி. சுப்பிரமணியம், "எப்போதும்போல் நமது கோவையில் காங்கிரசை வளர்ப்போம்" என்கிறார். தோற்ற இடங்களில் மீண்டும் வெற்றி பெறவும், வெற்றி பெற்ற இடங்களை கைநழுவாமல் பார்க்கவும் முயற்சிகளைச் செய்யவேண்டும் என்கிற ஆவலும் பரபரப்பும் ஏற்பட்டிருக்கிறது காங்கிரஸ் வட்டாரத்துக்குள். நேருபண்டிதரே காங்கிரஸ்காரர்கள் மக்களை நோக்கிச் செல்லவேண்டும் என்று வலியுறுத்துகிறார்!

இப்படிப்பட்ட சூழ்நிலையில், திராவிட முன்னேற்றக்கழகத்தவருடைய கடமையும், பொறுப்புணர்ச்சியும் பன் மடங்கு வளர்ந்துள்ளது. இதனை உருவாக்கி செயலாக்கும் பெரும் பொறுப்பு அதிகமாயிருக்கிறது.

தேர்தல் காலத்தில் நாம் நுழைந்த இடங்கள் எத்தனையெத்தனையோ உண்டு; அதுபோல நாம் பெற்றிருக்கும் ஆதரவாளர்களின் தொகையும் பல இலட்சமாகும். அங்கெல்லாம் நமது கொள்கை மணம் பரவச் செய்ய வேண்டும். நமது எம். எல். ஏ.க்கள் வெற்றிப் போதையில் ஆழ்ந்து மகிழ்ந்தே இருந்துவிடுபவர்கள் அல்ல! தேர்தல் காலத்தில் சொன்னதுபோல், மக்கள் மன்றத்தில், விடாது தொடர்ந்து பவனி வந்து கொண்டேயிருப்பவர்கள். அவர்களை நன்றாக, அந்தந்தத் தொகுதியினர் பயன் படுத்திக் கொள்ளவேண்டும்.

ஆங்காங்குள்ள தோழர்கள் ஒவ்வொரு தொகுதியிலும் ஏராளமான கிளைகளை ஆரம்பித்திடல் வேண்டும்! கேரளம், அதோ, காங்கிரசல்லாத ஆட்சியை நிறுவி விட்டது. அதற்கு அடுத்தபடியாக இருக்கிற வாய்ப்பு, தமிழகத்துக்குத்தான்!! இதனை, எண்ணுங்கள், இப்போது நம்பக்கமிருக்கும் பதினேழு இலட்சமும் கோடியாக மாறட்டும் — குடிபுகாத இடமெல்லாம் கொள்கைகள் செல்லட்டும்- காங்கிரசைப்போல நாம் தேய் பிறையல்ல; வளரும் தேசிய இயக்கம். எனவேதான் நம் பக்கம் வாலிபர்களின் ஆதரவும், பொது மக்களின் அன்பும், குவிகிறது. அவர்களது அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாகும் வகையில், வழக்கம்போல கண்ணியம்—கடமை—கட்டுப்பாடு எனும் மூன்றினையும் மனதிலிருத்தி, முன்னேறுவோம்! முரசு கொட்டுவோம்!!

★

10-ம் பக்கத் தொடர்ச்சி

விட்டேன் என்று! ஆனால், அந்தத் திட்டத்தின்படி காரியத்தைத் துவக்கவே இல்லை.

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி, இலட்சிய நடிகர் ராஜேந்திரன், நடிகமணி டி. வி. நாராயணசாமி, இவர்கள், இந்தத் தேர்தல் செலவுக்கென்றே ஒரு நல்ல நிதி திரட்டி உதவவேண்டும் என்பதற்காக, ஒரு படத்தில் ஊதியமே பெறாமல் நடித்துத் தருவதாக முன் வந்தனர். நான்தான் அவர்கள் தர இருந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி, சில இலட்சரூபாய்கள், கிடைப்பதற்கான வாய்ப்பைப்பெறத் தவறி விட்டேன்.

அந்தத் தவறு, என்ன தொல்லையைத் தந்தது என்கிறாய்!

தேர்தல் நேரத்தில் தாங்க முடியாத பணமுடை!!

நூறு இடங்களுக்கு மேல் போட்டியிடுகிறோம்.

பணபலம் இல்லை—அதனை ஓரளவுக்கேனும் பெறத்தக்க வாய்ப்பு கண்ணுக்குத் தெரிந்தும் பயன்படுத்திக்கொள்ள தவறிவிட்டோம்.

பாய்மரமும் இல்லை — சுழற் காற்றும் அடிக்கிறது—கலம் என்ன கதி? என்று கேட்கும் நிலை அல்லவா இது.

இந்த நிலையிலே, இடம் 15 தான் என்றாலும், கிடைத்த ஓட்டுகள் 16-இலட்சத்துக்கு மேல் என்றால், தம்பி! அது உன் அறிவாற்றலின் விளைவு என்பதன்றி வேறென்ன? நாட்டு மக்களுக்கு, நாம் எடுத்துக்கூறி வருவது, புரிந்துவிட்டது என்பதுதானே இதன் பொருள்!

பெருமைக்கும் பூரிப்புக்கும் உரிய நிலைதான் இது—கேலி பேசுவோரும், உள்ளூர இதனை அறிவர்.

ஐயம் சிறிதேனும் உள்ளவர்களை, வேண்டுமானால், வெற்றிபெற்ற காங்கிரஸ்காரர் படும் வேதனையையும் பார்க்கச் சொல்லு, தோற்றாலும், முக மலர்ச்சியுடன் இருக்கும் நமது கழகத் தோழரையும் பார்த்திடச் சொல்!

தம்பி! கேரளத்தில் கம்யூனிஸ்டு அமைச்சரவை ஏற்பட்டிருக்கிறது. முற்போக்கு எண்ணம் கொண்டவர் அனைவரும் வாழ்த்தி வரவேற்க வேண்டிய மகத்தான நிகழ்ச்சி இது. வெற்றிபெற்று அமைச்சரவை அமைத்த கம்யூனிஸ்டுகளை வாழ்த்துவோம், தம்பி, உளமார. அமைச்சர் அவைதான் கம்யூனிட்டுகள் அமைத்தனரே தவிர, ஆட்சி எம்மிடம்தான் என்று டில்லியில் காங்கிரஸ் தலைவர்கள் எக்காளமிடுகின்றனர்! வெட்கத்தையும் துக்கத்தையும் மறைத்துக் கொள்ள, இது அவர்களுக்கு உதவுகிறது.

சங்கரன் நம்பூதிரிபட் எனும் கம்யூனிஸ்டு தலைவர், அமைச்சர் அவை அமைத்திருக்கிறார்.

கேரளத்துக் கவர்னர் மாளிகையிலே மூவர்ணக் கொடி பறக்கிறது! செங்கொடியைச் சிறப்புடன் பறக்க விட்டிருக்கும் கம்யூனிஸ்டு கட்சி, அமைச்சர் அவை அமைத்திருக்கிறது.

தம்பி! கேரளத்துக் காட்சியை மனக்கண்ணாலே காண்கிறாய் அல்லவா!

கேரளத்தில், கம்யூனிஸ்டு கட்சி பெற்றுள்ள ஓட்டுகள், 19,89,369! அமைச்சர் அவை அமைத்து அவனி எங்கும் கவனித்துப் பார்த்திடத்தக்க நிலையைப் பெற்றுவிட்டனர்.

தம்பி! பதினைந்தே இடங்களைத் தானே பெற்றார்கள் என்று நம்மைக் கேலி செய்கிறார்களல்லவா, இந்தக் கேலியைத் தாங்கிக்கொள்ளும் நாம், பதினாறு இலட்சம் ஓட்டுகளுக்கு மேல் பெற்றிருக்கிறோம்.

பத்தொன்பது இலட்சத்துக்கு ஒரு மந்திரிசபை அமைகிறது — கேரளத்தில்!

பதினாறு இலட்சம் நமக்கு — இடமோ பதினைந்துதான்!

என்னதான், ஏளனம் பேசட்டும், தம்பி! 19 இலட்சம் ஓட்டுகள் கேரளத்தில் அமைச்சர் அவை ஏற்பட உதவிற்று, என்ற உண்மையை அறிந்த பிறகு, நாம் பெற்ற 16 இலட்சத்தை அலட்சியமாக, கேவலமாகப் பேசத் தோன்றாது, அரசியலில் பொறுப்பும், நேர்மையும் வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களுக்கு, மற்றவர் பற்றி நமக்கென்ன கவலை.

அண்ணன்,



பெண்கல்வி--இங்கும் அங்கும்

அண்மையில், பாரிஸ் நகரில், ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான பண்பாட்டுக் கழகத்தின் (Unesco) சார்பில் ஓர் மாநாடு நடத்தப்பட்டது. அரசாங்கச் சார்பற்று இயங்குகின்ற அகில உலக அமைப்புகள் பலவற்றின் பிரதிநிதிகள் வந்திருந்தனர். தொழில் மயமாக உலகம் ஆகிவருவதன் பயன்களையும் அதனால் தோன்றும் பிரச்னைகளையும் ஆராய்வதே மாநாட்டின் நோக்கம். கத்தோலிக்கப் பெண்கள் அமைப்பின் சார்பில் மேரி ஆண்டிரே என்னும் பெண் பாதிரியாரும் மாநாட்டிற்கு வந்திருந்தார்.

மேரி ஆண்டிரே ஆப்பிரிக்காவிலேயே 25-ஆண்டுகள் வாழ்ந்தவர். அந்த நாட்டின் பல பகுதிகளை நன்கு அறிந்தவர். பிரெஞ்சு நாட்டுக்குச் சொந்தமாக உள்ள மத்திய ஆப்பிரிக்கா, மேற்கு ஆப்பிரிக்கா பகுதிகளிலும்—காமரூன்ஸ் என்னும் பகுதியிலும் — பெல்ஜியத்தின் வசமிருக்கும் காங்கோ பகுதியிலும் — மற்றும் ருவாந்தா உருந்தின், உகாண்டா ஆகிய பகுதிகளிலும் பணிபுரிந்து வந்தவர். அவர் செய்த பணியெல்லாம் பெண்களின் முன்னேற்றத்தைப் பொறுத்தவை.

அவர் ஆப்ரிக்கப் பெண்களைப் பற்றிய குறிப்புகளும் அவர்களைப் பற்றி வினவப்பட்ட வினாக்களுக்கு விடைகளும் தருகின்றார்.

"நான் முதன் முறை ஆப்ரிக்காவுக்குச் சென்றபோது இருந்ததை விட இப்போது பெண்களின் நிலை மிகவும் முன்னேற்றமும் உயர்வும் அடைந்திருக்கிறது. நாள் தோறும் புதுமை மிளிர்கிறது—பண்பாடு வளர்கிறது — பகுத்தறிவு மலர்கிறது, எனினும் இத்தகைய மாற்றம் சிறப்பாக நகர்ப் பகுதிகளில்தான் ஏற்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளிலும், காடுகள் நிறைந்த பகுதிகளிலும்—பள்ளிக்கூடமோ, மருத்துவ மனையோ, சமுதாய நல அமைப்போ எதுவும் அங்கு இல்லையென்றால்—பெண்களது வாழ்க்கை எப்போதும்போலத்தான் இருக்கும். வாழ்க்கை முறையில் எவ்வித மாறுதலும் இருப்பதில்லை. எனினும் குழந்தை வளர்ப்பில் மிகுந்த கவனம் காட்டுகிறார்கள்.

பட்டினங்களில் அல்லது துறைமுகமுள்ள நகரங்களில் — அவர்களது வாழ்க்கை முறையில் மிகுந்த மாறுபாடு காணப்படுகிறது. மேற்கு நாடுகளது நாகரிகம் பின்பற்றப்படுகிறது. இந்த மாற்றம் நன்மை பயக்குமா, அல்லது தீமை விளைக்குமா என்பது ஒருபுறம் இருக்க. முன்னேற்றம் பெற்ற இடங்களிற் பெரும் பகுதியில் இருபாலாருமே இக்கரு மாற்றத்திற்கு இலக்காகியிருப்பதால் ஒன்றுபட்ட குடும்பங்களே பெரும்பான்மை. எனினும் இத்தகு மாற்றத்தால் வேறுபட்ட குடும்பங்களும் இல்லாமலில்லை.

வெங்கடாசலம், M. A.,

சமூகத்திலே தோன்றியுள்ள இந்த மாற்றம் அல்லது புரட்சி இருவகைப்படும்: தம் நாகரிகத்திலும் நல்லனவற்றை விட்டுவிடாமல் பற்றிக்கொண்டு—ஐரோப்பிய நாகரிகத்தில் இருக்கின்ற நல்லவற்றையும் எடுத்துக்கொண்டு—இரண்டையும் பயன்படுத்தி வாழ்க்கை நடத்துதல் ஒன்று. புதுமையில் ஏற்படும் மோகத்தில் பழைய முழுவதையும் மறந்துவிடுதல் மற்றொன்று. இத்தகைய மோகம் புரட்சியின் துவக்ககாலத்திலே தவிர்க்கப்பட முடியாதது. எனினும் இன்புற்றிருக்கும் நாகரிகக் குடும்பங்களின் தொகை ஏராளம். எந்தக் குடும்பத்தைப் பற்றி எவ்வித செய்தியும் வெளிவருவதில்லையோ, அதைத்தான் இன்புற்றிருக்கும் குடும்பம் என்று நான் குறிப்பிடுகிறேன்" என்று அந்த அம்மையார் கூறினார்.

"பள்ளிக்குச் செல்லும் பெண்களின் தொகை பெருகி வருகிறதா?" என்றொரு கேள்வி கேட்கப்பட்டது.

அதற்கு அவர் தந்த பதில்:—

"ஆம்! பள்ளிக்குச் செல்லும் மாணவிகளின் தொகையைவிட மாணவர்களின் தொகைதான் அதிகம். மாணவிகள் மாணவர்களின் தொகையில் ஏறக்குறைய நான்கில் ஒரு பங்கே உள்ளனர். பெற்றோர்கள் ஆண் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புகிறார்கள் — பெண் குழந்தைகளை வீட்டு வேலைகளுக்குப் பயன்படுத்துகிறார்கள்! பிற்பட்ட குடும்பங்கள் பெண் கல்வியைவிரும்புவதில்லை. படித்த பெண் பணிவோடு இருக்கமாட்டாள் என்ற கருத்தால் ஏற்படும் பயந்தான் அதற்குக் காரணம். மேற்படிப்புக்குப் பெண்கள் அனுப்பப்பட்டால் திருமணம் சிறிது காலம் தள்ளிவைக்கப்பட

நேரும் என்பது அவர்கள் பெண் கல்வி மீது கொள்ளும் வெறுப்பிற்கு மற்ருெரு காரணம்!

கல்விகற்ற ஆண்கள் தொகை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. அரசாங்க அலுவல்—மருத்துவத் தொழில்—ஆசிரியப் பணி-ஆகிய எந்தத் துறையில் இருப்பினும் படித்த பெண்களைத் திருமணம் செய்துகொள்வதையே அவர்கள் விரும்புகிருர்கள். இந்த உண்மை பெண் கல்வியின் வளர்ச்சிக்கு மற்ருெரு காரணமாக — முக்கியமான தூண்டுகோலாக—விளங்குகிறது. அரசாங்கப் பணிகளில் தங்கள் பெண்களை அமர்த்துவதற்காகவே பெண்களைப் பள்ளிக்கனுப்பும் குடும்பங்களின் தொகையும் பெருகி வருகிறது.

இன்றைக்குப் பல பெண்கள் நர்சுகளாகவும் — ஆசிரியைகளாகவும்—சமுதாய சேவகிகளாகவும் ஆப்ரிக்காவில் பணிபுரிந்து வருகின்றனர். நைஜீரியாவில் சில பெண்கள் நீதிபதிகளாகவும் இருக்கின்றனர்!

“ஆப்ரிக்கப் பெண்கள் சமுதாயத்தில் எந்தஅளவு செல்வாக்குப் பெற்றிருக்கிருர்கள்?” இது அந்த அம்மையாரிடம் கேட்கப்பட்ட மற்ருெரு கேள்வி.

அவர் தந்த பதில்:—

“அவர்களதுசெல்வாக்கு இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. சமுதாயம் பெற்றுள்ள முன்னேற்றத்திற்கு ஏற்றவாறும் இது மாறுபடுகிறது. அவர்களின் திருமண முறை ஐரோப்பிய நாடுகளில் பழங் காலத்தில் கையாளப்பட்ட முறையோடு ஒத்ததாய் இருந்தது. தாய் தந்தையரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆடவனையே கணவனாக அடையவேண்டியநிலை இருந்தது. கணவனாக வரப்போகும் ஆடவன் இருக்கும் வீட்டிலேயே பெண்கள் வளர்க்கப்படும் சில பகுதிகளும் உண்டு. சில சமயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆடவர்களது வீட்டில் பெண் வளர்க்கப்பட நேரிடலாம். அவ்விதம் பழகிய ஆடவர்களில் யாரை அவளுக்குப் பிடிக்கிறதோ அவனையே மணாளனாக ஏற்கிருள். சிற்றூர்களில் ஒழுக்கத்தின் தரம் மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தது. அங்கு வாழ்ந்த மக்கள் ஒருவருக்கொருவர் நெருங்கிய உறவினர்களாக இருந்ததும், ஒழுக்கம் தவறியவர்கள் சமூகத்தின் ஏசலுக்கும், எதிர்ப்புக்கும் தண்டனைக்கும் ஆளாக வேண்டியிருந்ததுமே அதற்குக் காரணம்.

பலதார மணமுறை அங்கு உண்டு. எனினும் ஆடவர்கள் தங்கள் மனைவியர்கள் அத்தனை பேருடனும் சேர்ந்தாற்போல் வாழ்ந்தனர். திருமணமான ஒவ்வொரு பெண்ணும் ஏதாவதொரு தொழில் செய்வாள் — அதனுல் வருகின்ற வருமானத்தைக் கொண்டு குழந்தைகளைக் காப்பாற்றினுள். எனவே குழந்தைகள் பால் அவர்களது தந்தை பெற்றிருந்ததைவிட, தாய்பெற்றிருந்த செல்வாக்கும், மதிப்பும், அன்பும் அதிகம்.

இன்றைய நிலை வேறு. சீரான வாழ்க்கைத் தரம் பெற்ற பெண்களிற் பெரும்பகுதியினரது பண்பாடும் பழக்க வழக்கங்களும் மாறி வருகின்றன. ஆங்கிலத்தையோ, பிரெஞ்சு மொழியையோ, மற்றெந்த ஐரோப்பிய மொழியையோ அவர்கள் பேசாவிட்டாலும், நுண்ணறிவு மிக்கவராய் — சூழ்நிலைக்கேற்றபடி நெளிந்து கொடுக்கும் தந்திரம் அமையப் பெற்றவராய்-உலகியல் அறிவு உள்ளவராய் விளங்குகிருர்கள். வாழ்க்கை முன்னேற்றத்திற்கு மேற்கு நாடுகள் கைக்கொள்ளும் நுண்ணியல் முறைகளைப் பின்பற்றவும் தயங்குவதில்லை-அதே சமயத்தில் தமது பழைய வழக்கங்களில் சிறப்புத் தரும் பகுதிகளைக் காப்பாற்றவும் அவர்கள் தயங்குவதில்லை! எனவே ஆப்பிரிக்கப் பெண்கள் தமது சமூகத்தில் பெற்றிருக்கும் செல்வாக்கு வாழ்த்துதற்குரியது — வளர்ந்து வருவது.

பலதார மணத்தை விரும்புகின்ற ஆடவனைப் படித்த பெண்கள் மணப்பதில்லை! எளிய வாழ்வாயினும் தம்மை ஏற்றுக் கொண்டவனும் தமது குழந்தைகளும் உடனிருக்கும் வாழ்வைத் தான் அவர்கள் விரும்புகிருர்கள். தங்கள் கணவன்மார்களிடமும் குழந்தைகளிடமும் பெற்றிருக்கும் செல்வாக்கின் மூலம் சமூகத்தில் மிகச் சிறந்த செல்வாக்கைப் பெற சாத்தியமாகிறது. முக்கிய குடும்பச் செயல்கள் அனைத்திலும் கணவனும் மனைவியும் விவாதித்தே பணியாற்றுகின்றனர், சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்றிருப்பது குடும்பப் பெண்கள் மட்டுமல்ல. இவர்களது செல்வாக்காவது மறைமுகமானது. நர்சுகளாகவோ — ஆசிரியைகளாகவோ — சமூக சேவகிகளாகவோ —பணியாற்றுபவர்கள் தங்களது பணியின் மூலம் நேரடியான செல்வாக்கைப் பெறுகின்றனர்.

புதிய கருத்துக்களையும் பழக்க வழக்கங்களையும் வரவேற்க ஆப்ரிக்கப் பெண்ணினம் என்றுமே தயங்குவதில்லை! முன்னேற்றப் பாதையிலே செல்ல அவர்கள் முயல்கிருர்கள் — மெத்தவும் விரும்புகிருர்கள்! ஐரோப்பிய அமெரிக்கக் குடும்பங்களின் வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ள அவர்கள் காட்டும் ஆவலும் ஆர்வமும் அளவு கடந்தன. எனினும் அவர்கள் தங்களது பண்பாட்டையோ — பழக்கவழக்கங்களையோ, கலையையோ—கண்ணை நெறிமுறைகளையோ, என்றும் மறப்பதில்லை! தம் சொந்த மொழியையே பேசுகின்றனர் — பிள்ளைகட்கும் பயிற்றுகின்றனர். அச்சமின்மையும்-அரும்பாடுபட்டு உழைக்கும் ஆற்றலும் — தாய்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் தன்மையும் — ஆப்ரிக்கப் பெண்கள் பெற்றுள்ள அரும்பெரும் செல்வங்கள்! எதையும் எளிதில் புரிந்துகொள்ளும் திறனும்—தொடுத்த பணியைத் திறம்படச் செய்துமுடிக்கும் திண்மையும் கொண்டவர்கள் அவர்கள்!

இன்னும் சொல்லப்போனல் அவர்கள் பெண்களாக இருப்பினும் பெண்ணினத்தின் தலைவர்

அழகிய கட்டிடங்களும், அழகான புத்தகங்களும், ஓவியங்களும், அழகான எல்லாப் பொருள்களும் உண்மையாகவே நாகரிகத்தின் அறிகுறிகளே. இவற்றைவிட நற்பண்புகளும் நற்செயல்களும் வாய்ந்து தன்னலம் அற்றுப் பிறர் நலம் பேணி உழைப்பவனுமாயும் உள்ள மனிதனே உண்மையான நாகரிகத்தின் அடையாளம். பொதுமக்களின் நன்மைக்காகப் பாடுபடுவதிலும் மேன்மையான தொழில் வேறு எதுவும் இல்லை.

கள் — வழிகாட்டிகள்! சமுதாய நலத்திலே கருத்தும், கடமையுணர்வும் கொண்டவர்கள். ஆப்ரிக்காவிலே பெண்கல்வி மிகவேகமாகப் பரவி வருவதற்குரிய முக்கிய காரணம், படித்த வாலிபனை மணம்செய்து கொள்ளலாமென்ற எண்ணமோ, அரசாங்கப் பணிகளில் அமரவேண்டும் என்ற ஆசையோ அல்ல! இவற்றிற்கெல்லாம் மேலாக உள்ள காரணம், சமுதாய முன்னேற்றத்திற்கு—சிறப்பாகப் பெண்ணினத்தின் உயர்வுக்கு, உறுதுணையாய்த் தாங்கள் அமையவேண்டும் என்ற நல்லெண்ணமாகும்!'' என்று அந்த அம்மையார் கூறுகிறார்கள்.

''இருட் கண்டம்'' என்று பெயராமே ஆப்ரிக்காவுக்கு! — அதன் எத்தனையோ பகுதிகள் கண்டுபிடிக்கப்படவில்லையாமே இன்னும் —காட்டாறுகள் நிறைந்த கண்டமாமே அது! — மனிதனைக் கொன்று தின்னும் மிருகங்கள் மட்டுமல்ல,—வில்லையும் வாளையும் தானே வேட்டையாடுதற்குப் பயன்படுத்துகிறார்களாம் இன்னமும்! — ஆப்ரிக்க மக்கள் காட்டுமிராண்டிகள், நகரிகமோ, கலாச்சாரமோ, ஏதுமற்றவர்கள் என்றல்லவா கருதியிருந்தோம் இதுவரை!-விஞ்ஞானமோ, வேறெந்த நாகரிகமேம்பாடுமட்டுமல்ல,வெளி உலகே தெரியாது என்றல்லவா எல்லோரும்சொன்னார்கள் இன்றுவரை!-அத்தகைய கண்டத்திலே இவ்வளவு மாபெரும் புரட்சி சமுதாயத்திலே பூத்திருக்கிறதென்றால் வியப்படையாமலா இருக்க முடியும்? விந்தையாக இருக்கிறது என்று சொல்லத் தோன்றும் சிலருக்கு! எப்படி நம்புவது இத்தனையையும் என்று கேட்பவர்களும் இருக்கத்தான் செய்வார்கள்! என்றாலும் நமக்கோ, சிந்தனையைத் தூண்டுவதாக-சொல்லரும் படிப்பினைகள் சில சொல்லுவதாக இருக்கிறது இச் செய்தி!

எப்படி எப்படியோ இருந்திட்ட நாடுகளின் பெண்குலம் இந்த அளவு முன்னேறி இருக்கின்ற போது—இங்கென்ன நிலை? பெண்கள் படித்தால் பொல்லாங்கு விளையும் என்று இன்னமும்தானே பற்பல இடங்களிலே பேசப்படுகிறது!

ஆப்ரிக்க நாட்டுத் தாய்க்குலம் மேற்கு நாடுகளது நாகரிகத்தைக் கடைப்பிடித்தாலும் தம் சொந்த மொழியிலேயே பேசுகிறது, தம் மொழியையேதம்செல்வங்களுக்குப் பயிற்றுவிக்கிறது என்ற உண்மை நமது செவிக்கும் சிந்தனைக்கும் விருந்தாகவல்லவா அமைகிறது! கல்வி கற்றால் தமிழகத்துத் தையலினமும் அப்படித்தானே செய்யும்! 'பாரதம்' என்னும் பெயர் சொல்லிக்கொண்டு பிற மொழிக்கும் மொழியாளருக்கும் பாதம் தாங்கவா செய்யும்?

★

தமிழுக்காகச் சில ஆக்கவேலைகள்

தமிழ் நாட்டில் வடமொழிப் பாடசாலைகள் சில இருக்கின்றன. அவற்றை மேற்பார்க்கத் தனியாக அரசாங்க அதிகாரி ஒருவர் (Inspector of sanskrit schools) இருக்கிறார். இம்மாகாண மக்களுக்குச் சிறிதளவும் பயன்தராத ஒரு மொழியைக் கண்காணிக்கத் தனி அதிகாரி ஒருவர் இருக்க; மாகாண மொழியாகிய தமிழுக்கென்று தனி அதிகாரிகள் இல்லை. இப்பொழுது உள்ள அதிகாரிகள் ஆங்கிலம் முதலிய பிற பாடங்களில் வல்லவரே தவிரத், தமிழில் வல்லவர் அல்ல. ஆதலால் தமிழ் பள்ளிகளில் நன்கு கற்பிக்கப்படவும் நன்கு வளர்ச்சி பெறவும் தனி முறையில் கவனம் செலுத்த ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தமிழ்க் கல்வி அதிகாரி ஒருவர் தேவைப்படுகின்றனர், இவர் தமிழ எம்.ஏ. தமிழ் பி.டி.. தேறியவராக இருத்தல் வேண்டும்.

இவர்கள் தொடக்க நிலை ஆசிரியர்களைக் கூட்டி அவர்தம் தமிழ் அறிவை வளர்ககவும் துணை செய்தல் வேண்டும்; உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் வளர்ச்சியைக் கவனித்தல் வேண்டும். மேலும் தமிழை வளர்க்க வழி வகைகளைக் காண வேண்டும்.

இதுவரையில் ஒரு வித்துவான கல்லூரிகூட அரசாங்கம் நடத்தவில்லை. பெண்களுக்கென்று தனிப்புலவர் கல்லூரி இல்லை. தலைநகரான சென்னையில் ஆண்களுக்கு ஒரு கல்லூரியும், பெண்களுக்கு ஒரு கல்லூரியும் ஏற்படுதல் வேண்டும். திருச்சி அல்லது திருநெல்வேலியில் ஒன்றும் சேலத்தில் ஒன்றும் ஏற்படுதல் வேண்டும்,

T. S. அவிநாசிலிங்கனார் காலத்திலிருந்து ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளியிலும் முதல் மூன்று படிவங்களில் தமிழ் கற்பிக்க வித்துவான்கள் இல்லை; செகண்டரிகிரேட் ஆசிரியர்களே இருக்கின்றனர். இவர்களுக்கோ தமிழ் தெரியாது. இதனால் முதல்மூன்று படிவங்களில் தமிழ் அறிவு பிள்ளைகளிடம்நன்முறையில் பரவவில்லை. இவர்கள் நான்கு, ஐந்து, ஆறும் படிவங்களில் இலக்கண அறிவு இல்லாமல் இடர்ப்படுகின்றனர். ஆதலால் முதல் மூன்று படிவங்களிலும் தமிழ்ப் புலவர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

தமிழ்ப் பாடநூல்கள் அறிவுக்குப் பொருத்த மற்ற ஆபாச கதைகளையும் பயனற்ற பாடங்களையும் கொண்டுள்ளன. தமிழ் நாட்டு இயற்கைவளம், பண்டைச் சிறப்பு இவை பற்றிய பாடங்கள் மிகுதியாக இருக்கும்படி பாடத்திட்டம் வகுக்கப்பட வேண்டும். முதல் எட்டு வகுப்புகள் வரையிலும் தமிழகம் பற்றிய பூகோள பாடம், வரலாற்றுப் பாடல், இலக்கியப் பாடம் என்பன முற்றிய நிலையில் கற்பிக்கப்படுவதற்குரிய பாடத் திட்டம் தேவை. இத்திட்டம் வெளிவந்து பயன்தரின், எல்லாப் பிள்ளைகளும் நமது மாகாணத்தின் அமைப்பு, மலைகள், ஆறுகள், கனிப்பொருள்கள், வரலாறு இவைபற்றிய முழு அறிவைப்பெற இடமுண்டு.

இவை, நடைமுறைக்கு வரக்கூடியதாக அரசாங்கத்தைத் தூண்டும் பொறுப்பு சட்டசபை உறுப்பினர்கள் கையில் இருக்கிறதென்பதைச் சொல்லத் தேவையில்லை.

—டாக்டர். மா. இராசமாணிக்கனார்

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே--மண்ணடி--சென்னை-1

தமிழ்
எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்
ஒரே
வருடத்தில்

இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

சென்ற வருட ஏப்ரல் மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த வருட ஏப்ரலில் முடிவடைந்தது.

புதிய வகுப்புகள்

ஏப்ரல் 10-ந் தேதி

ஆரம்பமாகின்றன

வகுப்பில் சேர விண்ணப்பம் செய்துகொள்ள

கடைசி தேதி 9--4--1957

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்துகொள்க

இலக்கண ரீதியாக இங்கிலீஷில் பேசவும் சொந்தமாகக் கட்டுரைகள், கடிதங்கள் எழுதவும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். காலையிலோ மாலையிலோ வசதியான நேரத்தில் **வகுப்பிற்கு வந்து** ஒரு மணி நேரம் படித்தால் போதுமானது.

முக்கிய அறிவிப்பு:-

16 வயதிற்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். சென்னை நகரில் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்.

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில் ... அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.